மாநகர சபை, யாழ்ப்பாணம்

விலை ரூபா: 15.00


Registered as a News paper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 02 வியாழக்கிழமை (17.07.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 211




## விடத்தல் தீவை கைப்பற்றியதாக பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

மன்னார் விடத்தல்தீவு நகரப் பகுதியை இராணுவத்தின் 58-வது படைப் பிரிவு தமது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

வட மேல் கரையோரப் பகுதியில் மன்னாரிலிருந்து 20 கிலோமீற்றர் தொலைவில் விடத்தல் தீவு அமைந்திருப்பதாகவும் இங்கு விடுதலைப்புலிகளின் முக்கிய கடற்புலிகளின் முகாம் அமைந்திருந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

1990 ஆம் ஆண்டு இந்திய அமைதி காக்கும் படையினர் நாட்டை விட்டு வெளியேறிய பின்னர் முதற்தடவையாக விடத்தல் தீவு விடுதலைப்புலிகளிடமிருந்து பாதுகாப்புத் தரப்பினரால் விடுவிக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் இணையத் தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடற்புலிகளுக்கு மிகவும் முக்கியமான தளமாக விளங்கிய விடத்தல் தீவு முகாமின் வீழ்ச்சி அவர்களுக்குப் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியிருக்கும் எனப் பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித் (12 ஆம் பக்கம் பார்க்க)

### முன்னாள் ஜனாதிபதியுடன் பிரி.அமைச்சர் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள பிரித்தானிய இராஜாங்க அமைச்சர் மலொக் பிறவுண் நேற்று மாலை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

கொழும்பிலுள்ள முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாகவே கலந்துரையாடப்பட்டது.

சந்திப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரித்தானிய அமைச்சர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ அதிகாரிகள் ஆறு பேர் மேஜர் ஜெனரலாகப் பதவியுயர்வு

(கொழும்பு)

வடபோர் முனைகளில் சிறப்பாகப் பணியாற்றியதற்காக இராணுவ அதிகாரிகள் 6 பேர் விரைவில் மேஜர் ஜெனரல்களாகப் பதவி உயர்த்தப்படவுள்ளனர் என்று இராணுவ வட்டாரங்களிலிருந்து அறிய வருகின்றது.

மன்னார் சமரில் சிறப்பாகப் பணியாற்றிய செயலணிப் படைகள் மற்றும் உப செயலணிப் படைகளை வழிநடத்திய அதிகாரிகளே இவ்வாறு பதவி உயர்த்தப்படவுள்ளனர் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை ஜுலை முதல் செப்ரெம்பர் மாதத்திற்கிடையில் சுமார் 10 ஆயிரம் பேரைப் படைக்குச் சேர்க்கும் நடவடிக்கையைப் படைத்தரப்பு (12 ஆம் பக்கம் பார்க்க)

## பாலமோட்டையில் தாக்குதல் பத்துப் படையினர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திலுள்ள வடமேற்குப் பாலமோட்டையில் படையினரின் முன்னகர்வு தமிழீழ விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இதில் பத்துப் படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 19 பேர் காயமடைந்துள்ளனர். பாலமோட்டைப் பகுதியில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் படையினரின் செறிவான எறிகணை மற்றும் வெடிகணைச் சூட்டாதரவுடன் பெருமெடுப்பிலான முன்னகர்வை மேற்கொண்டனர்.

முன்னகர்வினை மேற்கொண்ட படையினருக்கு எதிராக விடுதலைப்புலிகள் தீவிர முறியடிப்புத் தாக்குதலை நேற்று முன்தினம் இரவு 7 மணி வரை நடத்தினர்.

இத் தாக்குதலையடுத்துப் படையினர் இழப்புக்களுடன் (12 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் மனிதப் புதைகுழி

# 16 பேரின் எலும்புக் கூடுகள் மீட்பு!

## கிணறு வெட்டும் போது புதைகுழி கண்டுபிடிப்பு

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு பாலமீன்மடுப் புதைகுழி ஒன்றிலிருந்த 16 பேரின் எலும்புத் துண்டங்கள் மீட்கப்பட்டுள்ளன. மூதூர் கிழக்கிலிருந்து யுத்த அகதிகளாக இடம் பெயர்ந்தவர்களுக்காக அமைக்கப்பட்டிருந்த முகாம் ஒன்றிலிருந்தே இந்த மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**

**முகாமில் தங்கியிருந்தவர்கள் கிணறு வெட்டிய போதே இந்த மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.** (12 ஆம் பக்கம் பார்க்க)



## மட்டு. மனிதப் புதைகுழி குறித்து சர்வதேச விசாரணை தேவை

### வடக்குக் கிழக்கு மனித உரிமைச் செயலகம் கோரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனித புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் தெரிவித்துள்ளதாவது,

மட்டக்களப்பு பாலமீன்மடுப் பகுதியில் நேற்று சான்றுகளுடன் பாரிய மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 1996 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோர் தொடர்பிலான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் அவற (12 ஆம் பக்கம் பார்க்க)

### மாகாண சபையிலிருந்து ஹசன் அலி இராஜினாமா

(மட்டக்களப்பு)

முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற தேசியப் பட்டியல் உறுப்பினராக ஹசன் அலி பதவியேற்கவுள்ளமையால் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இதேவேளை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூவ் ஹக்கீம் நாடாளுமன்ற உறுப்பினராக மீண்டும் பதவியேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

### நெடுங்கேணிப் பாலம் குண்டு வைத்துத் தகர்ப்பு

(கிளிநொச்சி)

வவுனியா மாவட்டத்தில் உள்ள நெடுங்கேணிப் பகுதியில் படையினரின் ஆழ ஊடுருவும் அணியினரால் பாலம் ஒன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணி - ஒட்டிசுட்டானை இணைக்கும் முதன்மை வீதியில் இத்திமடுச் சந்திக்கு அருகாமையிலுள்ள முதன்மைப் பாலமே நேற்றுப் புதன்கிழமை அதிகாலை 5.10 மணியளவில் ஆழ ஊடுருவும் அணியினரால் குண்டு வைத்துத் (12 ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே...

கொழும்பு றோயல் கல்லூரியின் க.பொ.த. உயர்தரப் பரீட் சைக்கான **வணிகக் கல்வி-I (பகுதிI)** பாட மாதிரி வினாத்தாள்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 717 மில்.ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 69 செயற் திட்டங்கள் அமுலில்

## நீகோட் பணிப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 2008 / 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நீகோட் திட்டத்தின் கீழ் 717 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 69 செயற் திட்டங்கள் நடைமுறைப்படுத்தியுள்ளதாக நீகோட்டின் யாழ்.மாவட்ட உதவித்திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம் உட்பட்ட பல சேவைகளின் அபிவிருத்திக்கு என கடந்த 2002ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நீகோட் திட்டத்தின் கீழ் கடந்த யூன் 30 ஆம் திகதிவரை 768.9 மில்லியன் ரூபாய் செலவில் 117 செயற்றிட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

2008/2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 717 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 69 செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்டத்தில் நீகோட் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதியின் முழுப்பகுதியும் நடை முறைப்படுத்தி விட்டதாகவும் நீகோட் திட்டத்தின் யாழ்.உதவித்திட்டப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (சு-5)



நயினாதீவு மகாவித்தியாலய பாடசாலை சமூகத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமாரின் அனுசரணையுடன் வெள்ளடைக்கிரவல் வீதி மீள்புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது. வேலணை பிரதேச சபை செயலாளர் கை.மகேந்திரலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவர் ப.க.பரமலிங்கம், அதிபர் சொ.பகீரதன், பாடசாலை மாணவர்கள், பொறுப்பதிகாரி ந.மோகரூபன் மற்றும் அலுவலர்களையும் படத்தில் காணலாம்.

## சுத்திகரிப்புத் தொழிலாளர் நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பகுதியில் 30 வயதிற்குட்பட்ட ஆண் விண்ணப்பதாரிகளுக்கான செயன்முறை நேர்முகப் பரீட்சை யூலை மாதம் 21, 22 ஆகிய திகதிகளில் சங்கானைப் பிரதேச வைத்தியசாலையிலும் யூலை 23 ஆம் திகதி பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலையிலும் நடைபெறும்.

பரீட்சார்த்திகளுக்கான தனிப்பட்ட கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

✦ ✦ ✦

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனைப் பகுதியில் 30 வயதிற்குட்பட்ட ஆண் விண்ணப்பதாரிகளுக்கான செயன் முறை நேர்முகப் பரீட்சை யூலை மாதம் நேற்று 16; 18,19 ஆகிய திகதிகளில் பிரதேச வைத்தியசாலை அச்சுவேலியில் நடைபெறு வதாகவும் பரீட்சார்த்திகளுக்கான தனிப்பட்ட கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார சேவைகள் பிராந் தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (அ)

## டாக்டர் குகதாஸனின் கண் சிகிச்சை சேவை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அடுத்த வாரத்திலிருந்து ஒவ்வொரு திங்கட்கிழமையும் காலை 9மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலை கண்சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி எஸ்.குகதாஸன் கண் சிகிச்சை சேவையினை மேற்கொள்ளவுள்ளார்.

இதேபோன்று அடுத்த வாரத்திலிருந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலை 9 மணிக்கு பிரெஞ்சு மருத்துவக்குழுவைச் சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணர் சிகிச்சை சேவையினை மேற்கொள்வார்.

நோயாளர்கள் இச்சேவையினை பயன்படுத்தி பயன்பெறுமாறு யாழ்.சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

## ஆளுமை விருத்தி கருத்தரங்கு

கோப்பாய் பிரதேச இளைஞர் யுவதிகளுக்கான ஆளுமை விருத்திக் கருத்தரங்கு எதிர்வரும் 28,29 ஆம் திகதிகளில் தென்கோவை சங்கமம் நிறுவனத்தில் இடம்பெறவுள்ளதாக அருட்பணி பே.பெனிக்னஸ் அடிகள் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளுக்கான அனுசரணையை பருத்தித்துறையிலுள்ள அஞ்சலியகத்தினர் வழங்கவுள்ளனர். (ச)

## பாடல் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை சென்.றொசாறியன் ச.ச.நிலையம் உள்ளூராட்சி வாரத்தினை சிறப்பிக்கும் முகமாக தனிப்பாடல் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

இதில் பங்குபெற விரும்பும் போட்டியாளர்கள் தமது விண்ணப்பங்களை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ 16.8.2008 காலை 10 மணிக்கு முன்னதாக கிடைக்கும் விதத்தில் நிலையத் தலைவர், சென். றொசாறியன் ச.ச.நிலையம், 28/1 ஆனந்தன் வடலி வீதி;, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கலைமகள் திருவுருவ திரை நீக்கல் நிகழ்வு

(நெல்லியடி)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய கலைமகள் திருவுருவ திரை நீக்கல் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி அதிபர் செ.சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வை. செல்வராஜாவும் சிறப்பு விருந்தினராக க... வெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

## குரு பூர்ணிமா தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கொக்குவில்,தாவடியில் அமைந்துள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு குரு பூர்ணிமா நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் 'குருகீதை' வாசிப்பு, 'குரு வணக்கத்தின் அத்தியாவசியம்' எனும் பொருளில் பிரதம விருந்தினரான தயாள்பாக் ஆச்சிரமத் தொண்டர் ஸ்ரீ.ச.கிருஷ்ணானந்தாவின் உரையும், யோகாசன, தியானப்பயிற்சிகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெறும். (ஓ)

## ஏழு பெண்கள் வழக்குத் தாக்கல்

# தந்தைகளை இனங்கண்டு கொள்ள மரபணுப் பரிசோதனைக்கு உத்தரவு

(யாழ்ப்பாணம்)

தம்மை காதலித்து கர்ப்பமாக்கி குழந்தை பெற்ற பின்னர் ஏமாற்றியவர்களுக்கு எதிராக யாழ்ப்பாணம் மற்றும் மல்லாகம் நீதிமன்றங்களில் 7 பெண்கள் தாக்கல் செய்த வழக்குகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஆர். வசந்தசேனன், மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி சரோஜினிதேவி இளங்கோவன் ஆகியோர் குற்றவாளிகளை இனங்கண்டு கொள்ளும் பொருட்டு குழந்தைகளை மரபணு பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டனர்.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட குழந்தைகளின் தந்தையர்கள் என குற்றம் சாட்டப்பட்ட நபர்களின் மரபணுக்கள் எடுக்கப்பட்டு பரிசோதனைக்காக நேற்று கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட 7 பெண்களில் ஒருவர் 13 வயதுக்குட்பட்டவர் என்றும் ஏனையோர்கள் 20வயதுக்குட்பட்டவர்கள் என்றும் நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. (ந-ச-5)

## கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய பாடசாலை மாணவர்களின் சித்திர,சங்கீத, நடன மற்றும் நாடகமும் அரங்கியலும் முதலான பாடங்களை உள்ளடக்கிய அழகியல் கண்காட்சி நேற்று கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகத்தினால் ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ந்து 3 நாட்கள் காலை 9 மணி முதல் 3 மணிவரை நடைபெறவுள்ள இக் கண்காட்சியை அனைத்து மாணவர்களும் பார்வையிட்டு பயனடையுமாறு கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.(அ-4)

## ஆசிரியர் கருணாகரனின் பொருளியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த பரீட்சைக்கு இவ்வாண்டு தோற்றவுள்ள மாணவர் நலன் கருதி பொருளியல் பாடம் சம்மந்தமான வழிகாட்டல் கருத்தரங்கு யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் ஆசிரியர் வே.கருணாகரன் கருத்துரையினை வழங்குவார்.

பல்லூடக எறிகருவியின் (மல்ரிமீடியா புறஜெக்ரர்) துணையுடன் பொருளியல் பாட சம்மந்தமான பரீட்சை அனுபவங்கள் மற்றும் நடைமுறை அம்சங்கள் பற்றி இக்கருத்தரங்கில் விளக்கமளிக்கப்படும்.

ப்ரீட்சைக்குத்தோற்றவுள்ள சகல மாணவர்களையும் இக்கருத்தரங்கில் பங்குபற்றி பயனடையுமாறு வித்தியாலய அதிபர் வி. மாணிக்கம் கேட்டுக் கொண்டுள்ளார். (ச)



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா அண்மையில் நடைபெற்றது. இதில் சுவாமி தேருக்கு ஆரோகணிப்பதை முதலாவது படத்திலும் அடியார்கள் தேரை வடம்பிடித்து இழுத்து வருவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்:குரு, கோபி)

# இன்று ஒரு தகவல்

## மருள்நீங்கிய மாசறு காட்சி!

ஒரு முனிவர் மரத்தடியில் உட்கார்ந்திருந்து, ஊசியில் நூலைக் கோர்த்து தன் வேட்டியிலிருந்த ஒரு கிழிசலை தைத்துக்கொண்டிருந்தார். கைதான் கடமையைச் செய்து கொண்டிருந்தது. அவரது மனமோ கடவுளை நினைத்துக் கொண்டிருந்தது.

அந்த சமயத்தில் பார்வதியும்–பரமசிவனும் ஆகாய வீதியில் வலம்வந்து கொண்டிருந்தார்கள். மரத்தடியில் ஒளிப்பிழம்பாக உட்கார்ந்திருந்தார் முனிவர். பார்வதி இதைக் கண்டதும் பரமசிவன் பக்கம் திரும்பி "அங்கே மரத்தடியில் பார்த்தீர்களா?" என்று கேட்டார்.

"பார்த்தேன்!" என்றார் அவர். "பார்த்த பிறகும் நாம் எப்படி சும்மா போவது? வாருங்கள்! அங்கு போய் அவருக்கு ஏதாவது வரம் கொடுத்துவிட்டு வரலாம்!" என்றார் பார்வதி.

பரமசிவன் முகத்தில் புன்னகை. "அவனைப் பற்றி லேசாக நினைத்துவிடாதே! அவன் அந்த நிலையையெல்லாம் கடந்தவன். அதனால் அவனிடம் போவது வீண்வேலை. நாம் நமது வழியில் போவோம்!" என்றார் அவர்.

இருந்தாலும் பெண்கள் சொன்னால் சொன்னதுதானே. பிடிவாதத்தில் விட்டுக்கொடுக்க மாட்டார்களே. அப்படி இருக்கும் போது அம்மை என்ற மாயா சக்தி ஆண்டவனை சும்மா விட்டுடுமா?

கட்டாயப்படுத்தி மரத்தடிக்கு அழைத்து வந்துவிட்டார் பார்வதி. இருவரும் அந்த முனிவர் முன் நின்று வணக்கம் சொன்னார்கள்.

முனிவர் அன்புடன் வரவேற்று மோர் கொடுத்து உபசரித்தார். அவ்வளவுதான். அதை கொடுத்துவிட்டு தன்பாட்டுக்கு கிழிசலைத் தைக்க ஆரம்பித்தார். பரமசிவனும் பார்வதியும் கொஞ்ச நேரம் பொறுமையாக உட்கார்ந்து பார்த்தார்கள். முனிவர் நிமிர்ந்து பார்ப்பதாய் இல்லை.

பார்வதி, பரமசிவனிடத்தில் திரும்பி "கேளுங்கள்" என்பது மாதிரி கண்ணைக் காட்டினார். அவரும் அதைப் புரிந்து கொண்டு முனிவரைப்பார்த்து "தவச்செல்வரே! நாங்கள் ஒருவருக்கு காட்சி தந்துவிட்டால் ஏதாவது வரம் கொடுத்துவிட்டுப் போவது தான் பழக்கம்! அதனால் உங்களுக்கு ஏதாவது வரம்...!" என்று இழுத்தார். முனிவர் சிரித்தார்!

"வரமா? உங்களின் தரிசனத்தை விடவா? அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்! நீங்கள் உங்கள் வழியைத் தொடருங்கள்!" என்றார். என்றாலும் பார்வதியும் பரமசிவனும் விடுவதாக இல்லை.

"சரி! அப்படி கட்டாயமாக வரம் கொடுத்துவிட்டுத் தான் போக வேண்டுமானால் இந்த ஊசிக்குப்பின் இந்த நூல் போவதற்கு வரம் கொடுங்கள்!" என்றார் முனிவர். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

"ஏற்கனவே இந்த ஊசிக்குப் பின்தான் இந்த நூல் போய்க்கொண்டிருக்கிறதே! இதற்கு நாங்கள் எதற்கு வரம் கொடுக்கவேண்டும்?" என்றனர்.

"அதைத்தான் நானும் கேட்கிறேன்! நான் ஒழுங்கு தவறாமல் நடந்துகொண்டு வந்தால், வரவேண்டிய பலன் நியதிப்படி தானாக வருமே! இடையில் நீங்கள் எதற்காக எனக்கு வரம் கொடுக்கவேண்டும்?" என்று கேட்டார் முனிவர்.

இதைக் கேட்டதும் பார்வதியும் பரமசிவனும் சிரித்துக் கொண்டே அவர்கள் வழியில் போய்விட்டார்களாம். இந்த முனிவர் எய்திய காட்சிக்குப் பெயர்தான் "மருள் நீங்கிய மாசறு காட்சி" என்கிறார் நினைவுக்கலை ஏந்தல்–பதின் கவனகர்–திருக்குறள் இராமையா.

முப்பது வயதில் பார்வையை இழந்த இவர் முப்பால் ஒளியைத் துணையாய் கொண்டவர். நம் காலத்தில் வாழ்ந்தவர்.

"இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி மாசறு காட்சியவர்க்கு"

என்னும் குறளில் வரும் மருள் நீங்கிய மாசறு காட்சி என்றால் என்ன என்பதை விளங்குவதற்காக அவர் இந்தக்கதையை சொல்லியிருக்கிறார்.

"மனத்தை தூய்மைப் படுத்தத் தவறியவர் இறைவனை நம்பியும் பயனில்லை. இறைவனை நம்பாமல் இருந்தும் பயனில்லை. ஆக, உண்டு என்பதும் இல்லை என்பதும் உள்ளம் தூய்மையாய் இருக்கும் பட்சத்தில் ஒரு புள்ளியில் சென்று முடிகிறது"

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# மாவட்ட மட்ட ஆங்கில தின வாய்மொழிப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான மாவட்ட மட்ட ஆங்கில தின வாய்மொழிப் போட்டிகளில் பங்கு பற்றி முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விப ரங்கள் வருமாறு,

**ஆங்கிலப் பாடல் தரம்-3**

உ.விதுஷன்-சென்ஜோன்ஸ் பொஸ்கோ வித்தி., பா.காருண் யா-சென்ஜோன்ஸ் பொஸ்கோ வித்தி., த.டிலக்ஷனா-மானிப்பாய் பெண்கள் கல்லூரி.

**தரம் -4**

ஜெ.செனோவா-சென்ஜோன்ஸ் பொஸ்கோ வித்தி., பெ.அமன்டா நிசறின்-யாழ்ப்பாண கல்லூரி, யோ.நிவேதன்-யாழ்ப்பாண கல்லூரி.

**தரம்-5**

ந.நிஷோதா-யாழ்ப்பாணக் கல்லூரி, கு.எட்மண்ட்-சென்ஜோன் பொஸ்கோ வித்தி., ஜெ.ஷாவியோ-ஜோன் பொஸ்கோ வித்தி.

**தரம்-6**

ஜெ.ஷலோமி-உடுவில் பெண்கள் பாடசாலை, த.லக்ஷ்மி-மெதடிஸ்த பெண்கள் உ/த பாடசாலை, ஜோ.றோசீல்-சுண்டுக்குளி பெண்கள் பாடசாலை.

**தரம் -7**

சா.தேனுஜா-இளவாலை கன்னியர்மடம் ம.வி., க.றிவிகரன்-சென்ஜோன்ஸ் கல்லூரி, ந.சுதர்சன்-யாழ்.இந்துக்கல்லூரி.

**தரம்-8**

பெனடிக்ற் பிறேம்ஸி-சுண்டுக்குளி பெண்கள் பாடசாலை, அ.கிரிஷாந்தன்-சென்ஜோன்ஸ் கல்லூரி, ம.தருஷனா-மானிப்பாய் பெண்கள் கல்லூரி.

**தரம்-9**

கி.டெறிக் - பற்றிக்ஸ் கல்லூரி, ஜெ. ஜீவநேசன் - பற்றிக்ஸ் கல்லூரி, சி. பிரதக்ஷனா - உடுவில் பெண்கள் பாடசாலை.

**தரம் -10**

பொ. திவாகரன் - பற்றிக்ஸ் கல்லூரி, இ.ஜெனோஷா - வேம்படி பெண்கள் உ./த பாடசாலை.

**தரம்-11**

பு.கீர்த்திகா-அருணோதயாக் கல்லூரி, இ.கிறிஸ்ரீன்-உடுவில் பெண்கள் பாடசாலை, அ.சுப்திக்கா-உடுப்பிட்டி பெண்கள் பாடசாலை.

**ஆயத்தப்படுத்திய பேச்சு**

**தரம்-12**

சி.பபிதா-நெல்லியடி ம.ம. வித்தி, இ.கதுஷா-வேம்படி மகளிர் உயர்தர பாட., பா.மருரா-மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாட.

**தரம்-13**

முதலாம் இடம்:-கு.ஹர்சன்-யாழ்.இந்துக்கல் லூரி, இரண்டாம் இடம்:- கிறேஸ் ஷைசித்-சுண்டுக்குளி பெண்கள் பாட., சி.கஜலக்ஷமி-உடுவில் பெண்கள் பாட., உ.சகானா-உடுவில் பெண்கள் பாடசாலை.

**உடன் தயாரித்த பேச்சு**

**தரம் -12**

சி.சிவரஞ்சனி-உடுவில் பெண்கள் கல்லூரி, கி.அழகரசன்-யாழ். இந்து கல்லூரி, இ.சதுஷா-வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை.

**தரம் -13**

ச.லக்ஷிகா-வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை, பா.நீதுஜன்-மகாஜனாக்கல்லூரி, மூன்றாம் இடம்:- வி.சஜீவன்-ஹாட்லிக் கல்லூரி, க.ஈஸ்வரஜனனி-யாழ். இந்து மகளிர் கல்லூரி.

**ஆரம்ப பிரிவு நாடகம்**

உடுவில் பெண்கள் பாட, யாழ். இந்து ஆரம்பப் பாட., நெல்லியடி ம.ம.த.க. பாடசாலை.

**கனிஷ்ட சம்பாஷணை நாடகம்**

உடுவில் பெண்கள் பாட, திருக்குடும்ப கன்னியர் மடம், மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.

**சிரேஷ்ட சம்பாஷணை நாடகம்**

வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை, யாழ்ப்பாணக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை, டிறிபேர்க் கல்லூரி.

**சிரேஷ்ட கவிதை நாடகம்**

உடுவில் பெண்கள் பாட, திருக்குடும்ப கன்னியர் மடம், விக்கினேஸ் வராக்கல்லூரி. (ஓ)

## இராசிபலன்

17.07.2008
(ஆனி 02, வியாழக்கிழமை)
சதுர்த்தசி பிற்பகல் 12.45மணிவரை
பூராடம்பின்னிரவு4.09 மணிவரை
இராகுகாலம்1.30-3.00 மணிவரை
சுபநேரம் 7.30-9.00 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | புதிய முயற்சி, கட்டுப்பாடு, போசன சுகம், பிரயாணம். |
| இடபம் | திடீர்நன்மை ,முயற்சிதாமதம் , திடீர்பயம் , உடல்நலக்குறைவு. |
| மிதுனம் | களஸ்திர நன்மை , முயற்சிகை கூடல், விருந்துபசாரம். |
| கடகம் | நோய்குணமடைதல் , காரிய சித்தி, தொழில்நன்மை |
| சிங்கம் | புத்திரரால் கவலை, முயற்சி தாமதம் , பணவிரயம் . |
| கன்னி | சுபநிகழ்ச்சி, முயற்சிதாமதம், புதிய விடையம் , தனவிரயம் |
| துலாம் | நண்பர்கள்சந்திப்பு, முயற்சி கைகூடும் , விருந்துபசாரம். |
| விருச்சிகம் | விவாதம், வேலைச்சுமை, சயன சுகம், பணவிரயம். |
| தனுசு | கற்பனைமிகுதி, புதியமுயற்சி, கீர்த்தி , தெய்வசிந்தை. |
| மகரம் | அமைதிக்குறைவு, காரிய அலைச்சல், சுபசெலவு. |
| கும்பம் | முயற்சி பலிதம், தபொருள் சேர்க்கை , பெரியோர்உதவி |
| மீனம் | அதிகாரம் , தொழில்நன்மை, காரியசித்தி , தேகநலன். |

வளவன்

# இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண தென் ஆபிரிக்கா உதவி வழங்கும்

## அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவின் பின் புலத்துடன் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு உதவிவழங்க தென்னாபிரிக்கா தயாராகி இருப்பதாக அமைச்சர் பெ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

அண்மையில் தென்னாபிரிக்காவிற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த அமைச்சர் அந்த நாட்டின் சமாதான நடவடிக்கையாளரும் பிரதி அமைச்சருமான இராதாகிருஷ்ண படையாச்சியை சந்தித்து பேசியுள்ளார்.

இதன்போது தென்னாபிரிக்க பிரதி அமைச்சர் இலங்கை இனப்பிரச்சினை தீர்வுக்கு உதவிவழங்க தயாராக இருப்பதாக தெரிவித்ததாக அமைச்சர் பெ.சந்திரசேகரன் குறிப்பிட்டார். (அ)

# கொழும்பு, கம்பஹாவில் பாடசாலைகள் 25ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 4 வரை மூடப்படும்

(கொழும்பு)

கொழும்பு, கம்பஹா மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளில் சிலவற்றை எதிர்வரும் 25ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 4ஆம் திகதி வரை தற்காலிகமாக மூடிவிடுவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளதாக நம்பகரமாக தெரியவருகின்றது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 3 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள 15 ஆவது சார்க் மாநாட்டின் பாதுகாப்பை கருத்தில் கொண்டே இவ்வாறான தீர்மானமொன்றை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கம்பஹா மாவட்டத்தில் கட்டுநாயக்காவிலிருந்து கொழும்பு மாவட்டத்தில் பம்பலப்பட்டி வரையில் பிரதான வீதிகளுக்கு அண்மையிலிருக்கின்ற பாடசாலைகளையே தற்காலிகமாக மூடிவிடுவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள பிரதான வீதிகளில் உள்ள பாடசாலைகளில் சில மாகாண சபைகள் நிர்வகிப்பதனால் இவ் விடயம் தொடர்பில் மாகாண கல்வி யமைச்சருடன் கலந்துரையாடி முடிவெடுக்கப்படும் என்று கல்வியமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில் இரண்டாம் தவணை ஓகஸ்ட் 6ஆம் திகதி நிறைவுபெற்று மூன்றாம் தவணை செப் டெம்பர் மாதம் 2ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பால்மா விலைகள் செப்டெம்பர் வரை அதிகரிக்கப்படாது -வர்த்தக அமைச்சர்

(கொழும்பு)

பால்மா வகைகளின் விலைகள் செப்டம்பர் மாதம் வரை 50 சதத்தினாலும் அதிகரிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்று வர்த்தக, வாணிபத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். சந்தையில் நிலைகொண்டிருக்க முடியாத பால் மா நிறுவனங்கள் விலகிச் சென்றாலும் பரவாயில்லை. செப்டெம்பர் மாதம் வரை எக்காரணத்திற்காகவும் விலைகள் அதிகரிக்கப்படமாட்டாது.

400 கிராம் பால்மாவின் விலைகளை அதிகரிக்குமாறு பால் மா உற்பத்தி செய்யும் ஐந்து நிறுவனங் கள் அதிகார சபைக்கு விண்ணப்பித்துள்ள நிலையில் 400 கிராம் பால் மாவிலையை 275ரூபாவில் இன்னும் இரண்டு மாதங்களுக்கு வைத்திருப்பதற்கு அந்த நிறுவனங்களுடன் ஒப்பந்தம்செய்து கொள்ளுமாறு அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விலை அதிகரிக்கப்படுவது தொடர்பில் பால்மா உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கும் நுகர்வோர் அதிகார சபைக்கும் இடையே மே மாதம் முதலாம் திகதி செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் இம்மாதம் 31ஆம் திகதியுடன் காலாவதியாவதாகவும் பால்மா விலைகளை அதிகரிக்குமாறும் பால்மா உற்பத்தி செய்யும் ஐந்து நிறுவனங்கள் நுகர்வோர் அதிகார சபையிடம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தீர்த்தக் கேணி திறப்பு விழா

செம்மணி இந்துமயான அபிவிருத்திச் சபையினரால், செம்மணி இந்து மயானத் தீர்த்தக்கேணி திறப்புவிழா இன்று வியாழக் கிழமை பகல் 10மணிக்குமுன்னாள் பிர தேச சபைச்செயலர் செ.குகதாசன் தலை மையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் க.கணேஷ் கலந்து கொள் ளவுள்ளார். ஆசியுரையை பாலகதிர்காம தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ கு.சௌ பாக்கிய குமாரக்குருக்கள்.

சிறப்புவிருந்தினராக ஓய்வுபெற்ற அதி பர் த. நாகராசா, நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், கோப்பாய் பிரதேச செயலர் ஏ.மோகன்றாஸ், வலிகிழக்கு பிர தேச செயலர் த.நடராஜா, நல்லூர்பிரதேசசபை செயலர் மே.யோ.சாந்தசீலன், மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ, முன்னாள் மாநகரசபை ஆணையாளர் C.V.K. சிவ ஞானம், முன்னாள் கல்விப்பணிப்பாளர் க.மகேசன், செ.இ.ம.அ.சபை உபதலைவரும் கிராம அலுவலருமான சி.இலட்சுமி காந்தன், உயர்தொழில்நுட்ப கல்லூரி முன்னாள் பணிப் பாளர் லயன் கே.ஜெயரட்ணம் ஆகியோர் கலந்துகொள்வர். (ஓ)

## பற்றிக் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு பெண்களுக்கான பற்றிக் பயிற்சி நெறியொன்று அளவெட்டி மத்தி கணேசபுர நெசவு நிலையத்தில் ஆரம்பமாக வுள்ளது. இப் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப் பளை பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் கலந்துகொள்கிறார்.

யாழ்.கச்சேரி தொழில்துறைத்திணைக் களத்தைச் சேர்ந்த மாவட்ட அலுவலர் பொ.பௌராஜ் பயிற்சி நெறி ஒழுங்கமைப் பாளராக செயற்படுகின்றார். ஆர்வமுள்ள பெண்கள் இப் பயிற்சி நெறியில் கலந்து பயன் பெற முடியுமென மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவ சந்திரன் தெரிவிக்கின்றார். (ஓ)

## உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சைக்கிள், மரதன் ஓட்டப்போட்டிகள்

வேலணை பிரதேச சபையால் உள்ளூ ராட்சி வாரத்தை முன்னிட்டு மாவட்ட மட்ட சைக்கிள் (30 மைல்), மரதன் (10 மைல்) ஓட் டப்போட்டிகள் நடாத்தப்படவுள்ளது.

இப் போட்டியில் வயது வேறுபாடின்றி யாழ். மாவட்டத்தில் வசிக்கும் இளைஞர்கள் (ஆண் கள் மட்டும்) பங்குபற்றலாம் எனவும் பங்கு பற்ற விரும்புவர்கள் இதற்கான விண்ணப் பப்படிவங்களை ரூ.100 செலுத்தி எதிர் வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் வேலணை பிரதேச சபை பொதுசனத் தொடர்பு அதிகாரியிடம் (PRO) பெற்றுக்கொள்ளுமாறும் போட்டி நேரம், காலம், விதிமுறைகள் பின்னர் அறிவிக்கப் படுமெனவும் பிரதேச சபைச் செயலாளர் கை.மகேந்திரலிங்கம் அறிவித்துள்ளார். (அ)

## சமூக விஞ்ஞானப் போட்டிகள்

சமூக விஞ்ஞானப் பொது அறிவுப் போட் டிப் பரீட்சைகள் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் யாழ். கோட்டப் பாடசாலைகளுக்கு புனித மரியாள் வித்தியாலயத்திலும், நல்லூர் கோட்டப் பாட சாலைகளுக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரி யிலும், கோப்பாய்க் கோட்டப் பாடசாலை களுக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல் லூரியிலும் நடைபெறும் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேத நாய கம் தெரிவித்துள்ளார். இப்பரீட்சைகள் 17ஆம் திகதி வியாழக் கிழமை நடைபெறும் என அறி விக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கண்காட்சி விழா

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு மானிப்பாய் வலி தென் மேற்கு பிரதேசசபை முன்பள்ளிகளின் கண்காட்சி விழா பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் கடந்த செவ் வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி தென் மேற்கு பிரதேசசபை செயலாளர் திரு மதி பு.சிவலிங்கம், கௌரவ விருந்தினர் களாக வலிகாமம் வலய முன்பள்ளி உத விக்கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். மாணவர்கள் ஆசிரி யர்கள் அனை வரும் கலந்து பயன்பெறும் பொருட்டு கண்காட்சி இன்றும் தொடர்ந்து நடைபெறவுள்ளது. (ஓ)

# —வலிகாம கல்வி வலயம்— ஆங்கிலப் போட்டி முடிவுகள்

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாட சாலை மாணவர்களுக்கிடையேயான வலய மட்டவாய்மொழி ஆங்கிலப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

குழுப்பாடல் தரம்-2

மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப் பாய் சென் ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை, சுன்னாகம் நாகேஸ்வரி வித்தி.

தரம் – 3

மானிப்பாய் சென்ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை, மகாஜனாக்கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி.

தரம் – 4

யஅருனோதய கல்லூரி, சுன்னாகம் நாகேஸ்வரி வித்தி, நாகேஸ்வரி வித்தி.

தனிப்பாடல் *தரம் -2*

சு.தனுஜா–சுன்னாகம் நாகேஸ்வரி வித்தி, ரி.சங்கவி–யா/மல்லாகம் கனிஸ்ட வித்தி, ரி.சோவென்ஜா–யா/மகாஜனாக் கல்லூரி.

*தரம் 3*

ரி.டிலக்ஷனா–யா/மானிப்பாய் கல்லூரித பு.துஷாரா–யா/மகாஜனா கல்லூரித ஜே.அர் சனா– யா/மானிப்பாய் சென் ஆன்ஸ் றோ. த.க.பாட.

தரம் 4

எஸ்.ஜனனி–யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தி.த எ.தர்ஷன்–யா/நவாலி சென்பீற்றர் றோ.க.த.க.பாடசாலைத என்.தேனுஜன்–யா/ ஏழாலை வடக்கு அ.மி.த.க.




# புத்தாக்கக் கண்காட்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் ஜூன் மாதம் 5ஆம் 6ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த யாழ்.மாவட்ட புத்தாக்கக் கண்காட்சிப் போட்டி-2008 தவிர்க்கமுடியாத காரணங்களால் எதிர்வரும் செப்டம்பர் மாதத்திற்கு பிற்போடப்பட்டுள்ளது. பாடசாலை, வலய மட்ட போட்டிகள் (பிரிவு I) ஏற்கனவே நடைபெற்று முடிந்துள்ளன. அவர்களுக்குரிய மாவட்ட மட்டப் போட்டிகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 10ஆம், 11ஆம் திகதிகளில் நடைபெறும்.

இப் போட்டியில் பிரிவு II (பாடசாலை ஆசிரியர்களும், தொழில்நுட்பக் கல்லூரி, ஆசிரிய கலாசாலை மாணவர்களும்), பிரிவு III (சிறு, மற்றும் நடுத்தர உற்பத்தி முயற் சியாளர்கள், நிறுவனங்கள்), பிரிவு iv (தனி யார்களும், பல்கலைக்கழக, தொழில் நுட்பக் கல்லூரி, ஆசிரிய கலாசாலை விரிவுரையா ளர்களும்) என்பவற்றின் கீழ் பங்கு பற்ற விரும்புபவர்களுக்கான விண்ணப்ப முடிவுத் திகதியும் இம் மாதம் (ஜூலை) 21ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே புத்தாக்க கண்காட்சிப் போட்டி யில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 21ஆம் திகதி அன்று காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை /வேம்படி மகளிர் கல் லூரியில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க லாம். விண்ணப்பங்களை அவ்விடத்தி லேயே பெற்று உடனடியாக நிரப்பிக் கையளிக் கலாம். எனவே ஏற்கனவே விண்ணப்பிக்கத் தவறியவர்களும், புதிதாக விண்ணப்பிக்க விரும்புவர்களும் இவ் அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது புத்தாக்கத் திறமைகளை வளர்க்க வேண்டுமென யாழ்.பல்கலைக் கழக பௌதீகவியற்றுறைத் தலைவர் கலா நிதி நா.சிவயோகன் கேட்டுக் கொண்டுள் ளார்.

மேலதிக தகவல்களை அவரது அலு வல கத்துடன் நேரடியாகவோ அல்லது 2225924 என்ற தொலைபேசியுடன் தொடர்பு கொண்டோ பெற்றுக்கொள்ளலாம் எனவும் கலாநிதி சிவ யோகன் தெரிவித்துள் ளார். (அ)

# சட்டவிரோத மின் பாவனையாளருக்கு ரூபா 1 இலட்சத்து 84 ஆயிரம் தண்டம்

(சங்கானை)

வட்டுக்கோட்டை பொலிஸ் உத்தியோகத் தர்களும் இலங்கை மின்சாரசபை வட்டுக் கோட்டை ஊழியர்களும் இணைந்து கடந்த 14ஆம் திகதி அராலி வடக்கு, அராலி மத்தி, ஊரத்தி போன்ற பகுதிகளில் சட்ட விரோதமாக மின் சாரம் பாவித்து வந்தவர்கள் 12 பேரையும் கைதுசெய்து 15ஆம் திகதி மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் பாரப்படுத்திய போது 12 பேருக் கும் மல்லாகம் நீதி மன்றத்தால் தண் டம் விதிக் கப்பட்டதாகவட்டுக்கோட்டைமின்.பிர.சே.நிலைய மின் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (ஓ-15)

# வலி.தெற்கு பிரதேச சபை உள்ளூராட்சி வாரம்

(சுன்னாகம்)

சுன்னாகம், வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு மருதனார் மடம் திறந்த வெளியரங்கில் வலி தெற்கு பிரதேசசபைச் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற வுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையா ளர் திருமதி ம.வசந்தகுமார், சிறப்பு விருந் தினர்களாக வலி தெற்கு பிரதேச செயலர் திருமதி ச.மஞ்சுளாதேவி, சுன்னாகம் வர்த் தக வங்கி முகாமையாளர் இ.குலேந்திரன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் த.மலர் மகள் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன் கவிதைப்போட்டியில் 1ஆம் இடம்பெற்ற கவிதை வாசித்தல், உள்ளூ ராட்சி வாரத்தையொட்டி நடாத்தப்பட்ட போட்டி களின் பரிசளிப்பு, உலக புத்தகதின நிகழ்ச் சிக்கான பரிசளிப்பு, 25 வருட சேவைக்கால உத்தியோகர்த்தர்கள் ஊழியர்களைக் கௌர வித்தல் மற்றும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும். (ஓ)

## வெயில் -தமிழ் திரைப்படம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புற நிலைப் படிப்புகள் அலகில் ஏற்பாட்டில் இடம் பெற்றுவரும் கல்விசார்/கலைத்துவம் சார் படக்காட்சித் தொடரில் எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.30 மணிக்கு வாழ்க்கைப்பாதையில் தோற்றுப் போய் வீடு திரும்புகின்றவன் தன்னைச் சுற்றிய புற உலகில் மட்டுமல்லாது தனது சொந்த வீட் டிலேயே அந்நியனாகிப் போனதை முதன் மைப்படுத்தும் "வெயில்" திரைப்படம் வீடியோ காட்சி யாக அரசறிவியல் விரிவுரை மண்ட பத்தில் காண்பிக்கப்படவுள்ளது. இது தமிழ் சினிமா மரபிலிருந்து வேறுபட்டு விமர்சகர் களின் அக்கறைக்குள்ளாகிய படமாக விளங் குகின்றது.

திரைப்படக்காட்சியின் இறுதியில் திரைப் படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும். ஆர்வலர்கள் அனைவரும் வருகை தந்து பயன்பெற முடியுமென புற நிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித் துள்ளார். (ஓ)

## விளையாட்டு விழா

(இருபாலை)

பாலர் கல்விக்கழக நிர்வாகத்திலுள்ள திருநெல்வேலி ஞானக்குழந்தை இல்ல பாலர் பாடசாலையின் 16ஆவது வருடாந்த விளையாட்டுவிழா இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலையில் பாலர் பாடசாலை ஆசிரியை திருமதி சுபாஜினி கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் செல்வி ச.ம.யூ. பிறிட்ஜெற், சிறப்பு விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூ ராட்சித் திணைக்கள சமூக அபிவிருத்தி உத் தியோகத்தர் திருமதி சந்திராதேவி சுபாஷ்சந் திரன், கௌரவ விருந்தினராக யாழ். சைவப் புலவர் இராசையா ஸ்ரீதரன், யாழ். பாலர் கல் விக் கழகபாடசாலைப்பொறுப்பாளர்வகிருஷ்ண பிள்ளை, யாழ்.பாலர் கல்விக்கழக செயலா ளர் தெ.இரட்ணகோபால் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ-136)

## மஹோற்சவம்

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடை பெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை பகல் 10.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் பிற்பகல் 3.30 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும். (அ)

## "காந்தீயம்" ஜீன்-ஜூலை மாத இதழ் வெளிவந்துள்ளது

அகில இலங்கை காந்தி சேவா சங்கத் தின் வெளியீடான "காந்தீயம்" பத்திரிகை யின் ஜுன்–ஜூலை மாத இதழ் வெளிவந் துள்ளது.

பத்திரிகைப் பிரதியைப்பெறவிரும்பு வோர் ரூபா 5 பெறுமதியான முத்திரை ஒட் டப்பட்ட சுய முகவரியிடப்பட்ட நீண்ட கடித உறைஒன்றை ஆசிரியர் "காந்தீயம்" வாணி கணனிப் பதிப்பகம் இல 61 B1 ஆம் குறுக் குத்தெரு,வவுனியா என்ற முகவரிக்கு அனுப் பிப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக் கப்பட்டுள்ளது. (ஓ)





மக்கள் வங்கியின் 47ஆவது ஆண்டுவிழாவையொட்டி பரு.மக்கள் வங்கியில் இடம்பெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்ட முகாமையாளர் எம்.சிவநேசன், பிரதேசசபைச் செயலாளர் எஸ்.பசுபதி, இளைப்பாறிய நீதிபதி பி.சுப்பிர மணியம், சுவாமி சித்ரூபான்ந்தா ஆகியோரையும் வாடிக்கையாளர்களையும் படங்களில் காணலாம்.

# நோத்முதல் கோபல்லவா வரை 39

### ஓர் எதிர்க் கிளர்ச்சி

எதுவிதத்திலும் கிளர்ச்சியாளரை முற்றாக முறியடிப்பதே அவர்களின் முதல் நோக்கமாக இருந்தது. நிலைமை மிக மோசமாக இருந்ததையும் அது வெறுங் கலகம் அல்ல என்றும் உணர்ந்த ஆள்பதி அவர்கள் அத்தாணி மண்டபத்திலே அதிகாரிகள், திசாவைகள் அனைவரையும் அழைத்து ஆத்திரத்தோடு பேசினார். அவர்பேசியவற்றை வெகு அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த அதிகாரிகள் அன்றைய கிளர்ச்சி பெரும்பாலும் பொது மக்களிடையே தான் உண்டானதென்றும் அது வெகுவிரைவில் தணிந்து விடும் என்றும் கூறியதோடு விஞ்ஞான ரீதியில் ஓர் உதாரணமும் கூறி விளக்கினார்கள். நீரைக் காய்ச்ச உண்டாகும் உப்பு மீண்டும் நீரில் கரைந்து விடுவது போல பொதுமக்களிடையே எழுந்த கலகம் அவர்களிடையே விரைவில் தணிந்து விடும் என்றனர்.

கிளர்ச்சியாளருக்குச் சாதகமாகப் போலும் கண்டியில் கனத்த மழை பெய்தது. நிலச்சரிவுகளும் பெருவெள்ளமும் ஏற்பட்டன. ஆங்கிலேயர் கொழும்பிலிருந்து படைகளை அனுப்ப இயலாத வகையில் களனி கங்கை பெருக்கெடுத்துப் பாய்ந்தது. இதற்குள் கலகம் பன்மடங்காகப் பெருகியது. மொலிகொடையைத் தவிர ஏனைய பெரியார்கள் கலகக்காரர் பக்கம் சார்ந்து நின்றனர். ஆங்கிலேயர் மனஞ்சலித்து கண்டியை விட்டுப் போகவும் யோசித்தனர். அவர்கள் 1803ஆம் ஆண்டில்கண்டியரிடம் அனுபவித்த துன்பங்களை எண்ணிக் கவலைப்பட்டனர். இச்சமயத்தில் வேறொன்றுஞ் செய்ய இயலாது கண்டிப்பகுதியில் இராணுவ ஆட்சியைப் பிரகடனஞ் செய்தனர்.


ஆங்கிலேயர் எவ்வளவு முயற்சிகள் எடுத்த போதிலும் கிளர்ச்சி மேலும் பரவுவதாயிற்று. மூன்று கோறளை நான்கு கோறளை உடுநுவர, எட்டிநுவர ஆகிய இடங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் "வெள்ளையனே வெளியேபோ" என்ற குரல் ஒலித்தது. அதனால் எகிலப்பொல மீது சந்தேகம் கொண்ட ஆங்கிலேயர் அவனைச் சிறைப்படுத்தினர். ஆள்பதி அவர்கள் எகிலப் பொலவை துரோகி என அறிக்கையில் எழுதினார்.

### மீள் பார்வை

இதற்குள் நிலைமை ஓரளவுக்கு மாறியது ஏப்ரல் மாதத்தில் சென்னையில் இருந்து 2000 படைகளும், வங்காளத்திலிருந்தும் சென்னையிலிருந்தும் 5000 படைகளும் வந்திறங்கினர். அதனால் கண்டிமக்களுக்கு தேசாபிமானம் தலைக்கேறியது. துரைசாமி கண்டியரசனாகவும் கெபிட்டிப்பொல முதலாவது அதிகாரியாகவும் இருத்தல் வேண்டும் என தீவிர நடவடிக்கை எடுத்தனர்.

கெபிட்டிப்பொல படைத்தலைமை பூண்டு துரைசாமி சமேதனாய்ப் பரணகம என்ற இடத்தில் மேஜர் மக்டொனால்டைத் தாக்கினார். அது முதலாக ஆங்கிலேயருடைய கோட்டைகளைத் தாக்கி வெற்றிப் பெருமிதத்தோடு போன நேரத்திலே ஆங்கிலேயருடைய படைகள் திருகோணமலையில் இருந்து கண்டியை காப்பாற்றுவதற்கு விரைந்து சென்றனர். எது விதத்திலும் கலகத்தை அடக்க முனைந்த ஆங்கிலேயர் கெபிற்றிப்பொலவைப் பிடித்துத் தருபவருக்கு 2000 வெள்ளிக்காசு பரிசு தருவதாக பறையறைந்தனர். நாட்டபிமானம் நிறைந்த கெபிற்றிப்பொலவை காட்டிக்கொடுக்க கண்டியர் விரும்பவில்லை. அவர் கண்டியரின் அபிமானத் தலைவரல்லவா? இதற்குள் நாட்டபிமானம் கொண்ட தும்பறை மக்களின் தலைவன் மடுகல்லெ கெபிற்றிப்பொல பக்கம் சார்ந்தான். அவனுக்கு இரண்டாவது அதிகாரிப் பதவி கிடைக்கலாம் என்ற நம்பிக்கையில் அவன் துரைசாமியை இராசமரியாதையோடு பாதுகாத்து வந்தான். ஆங்கிலேயரை நாட்டை விட்டுத் துரத்தி விட்டுக் கண்டியரசின் கீழே ஒரு கொடியின் கீழ் இலங்கை முழுவதையும் ஓராசுச் பரிபாலித்தல் வேண்டும் எனத் தலைவர்கள் கருதினார்கள்.


மொலிகொட மாத்திரம் ஆங்கிலேயருக்கு விசுவாசமுள்ளவனாய் இருந்தான். அதனால் கொழும்பிலிருந்து நாலு கோறளைக்கூடாகக் கண்டி நாட்டுக்குப் படைகளையும் ஆயுதங்களையும் ஆங்கிலேயர் கொண்டு போனார்கள். மொலிகொடையைப் பின்பற்றி எக்னெலிகொடயும் விசுவாசமாய் இருந்தான். கண்டி நாட்டிலிருந்த முஸ்லிம்களுக்கு ஆங்கிலேயர்



அபயமளித்தமையோடு அவர்களுக்கு ஏற்படும் நட்டங்களையும் ஈடுசெய்வதாக வாக்களித்தனர். எனவே முஸ்லிம்கள் ஆங்கிலேயரை ஆதரித்தனர்.

**க.சி.குலரத்தினம்**

ஆங்கிலேயர் என்னதான் செய்தபோதிலும் கண்டியரை அடக்க வெகுவாகச் சிரமப்பட்டனர். அவர்களுடைய படைகள் வெகுவாகச் சேதப்பட்டன. படையில் இருந்த ஐரோப்பியர் ஆயிரமாயிரமாகக் கொல்லப்பட்டனர். எனவே அவர்கள் கண்டியை விட்டு வெற்றிகரமாகப் பின்வாங்கவும் யோசித்தனர். கெபிற்றிப்பொல 5000 வீரருடன் மட்டனூர் தளபதியின் பல்லாயிரம் படைகளை எதிர்த்து நிர்மூலமாக்கியதையும் கெபிற்றிப்பொல வின் படை வீரருக்கு எவருக்கேனும் தேசம் ஏற்படமையையும் டேவிகண்டு எழுதியுள்ளான். கெபிற்றிப்பொலவின் அபார மூளைத் திறனையும் செயற்றிறனையும் கண்டு ஆங்கிலேயர் அஞ்சினர். (தொடரும்)



# உச்சக்கட்ட போரினை எதிர்நோக்கும் புலிகளுக்கு துணை நிற்க வேண்டும்

## புலம்பெயர்ந்த தமிழ்மக்களிடம் வைகோ கோரிக்கை

சிங்கள தேசத்திற்கு எதிராக உச்சக்கட்ட போரை விடுதலைப்புலிகள் எதிர்நோக்கியுள்ள நிலையில் அவர்களுக்கு முழு அளவில் 'துணை நிற்க முன்வரவேண்டும் என்று புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் மக்களிடம் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் செயலாளர் வைகோ கோரிக்கை விடுத்துள்ளார்.

புலம்பெயர் நாடுகளில் நடத்தப்பட்ட பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுக்கு பாராட்டுத் தெரிவித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது,

புவனம் முழுவதும் வாழும் தமிழர்களின் உள்ளத்தில், நாடி நரம்புகளில் ஓடும் குருதி ஓட்டத்தில் தன்மான உணர்ச்சியை, தமிழ் குலத்தின் தொன்மை பண்பாட்டை ஊட்டுகிற நிகழ்ச்சி தான் பொங்கு தமிழ் எழுச்சி விழாவாகும்.

"தமிழர் வாழ்வும், வளமும் மங்காத தமிழ் தான் என்பதையும் கொலைவாளினை எட்டா மிகுக் கொடியோர்செயல் அரவே" எனும் அறை கூவலையும் தமிழ் மனங்களில் ஆழப்பதிக்கும் பொங்கு தமிழ் எழுச்சிவிழா, பூமிப்பந்தில் புலம்பெயர்ந்து வாழ்கிற தமிழர்கள் கொண்டாடும் பெருவிழாவாகும். இலங்கைத் தீவின் ஈழத்தமிழினம் தங்களின் பூர்வீக தாயகத்தை மீட்க அகில் எல்லாம் வாழும் தமிழர்கள் அனைத்து வழிகளிலும், ஆதரவுக் கரம் நீட்ட வேண்டிய அடிப்படை கடமையை உணர்த்துகிற நிகழ்வுதான் பொங்கு தமிழ் எழுச்சி விழாவாகும்.

போர்ப்பூமியில் விண்ணிலும், மண்ணிலும், கடலிலும் வீரசாகசம் புரிந்து விடுதலைப் புலிகள் உலகத்தையே பிரமிக்க வைக்கிறார்கள். உலகத்தின் பல நாடுகளிலும் இருந்து ஆயுதங்களை பெருமளவில் வாங்கிக் குவித்துள்ள சிங்கள அரசு, ஹிட்லரின் கோயபல்ஸ் பிரசாரத்தின் மூலம் தங்கள் கரம் ஓங்கி வருவதாக பித்தலாட்ட பிரசாரம் செய்து வருகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஒரு அங்குலம்கூட சிங்களப் படையினர் ஊடுருவ முடியவில்லை என்பது தான் நிதர்சனமான உண்மையாகும்.

தமிழ் இனத்தையே பூண்டோடு அழிக்க திட்டமிட்டு, வரும் சிங்கள அரசு தமிழ் மக்களுக்கு உணவும் மருந்தும் இல்லாமல் செய்து, பட்டினிக்கும், நோய்க்கும் தமிழ் இனத்தைப் பலியிட திட்டமிட்டு நடத்திவரும் கொடுமையை உலக நாடுகள் அறிந்துகொள்ளும் வகையில் அனைத்துலக சமுதாயத்தின் மனச்சாட்சியின் கதவுகளைத் தட்டுகின்ற நிகழ்ச்சியாக பொங்கு தமிழ் எழுச்சி விழா அமையட்டும்.

ஈழ மண்ணில் நஞ்சுக் குப்பிகளை கழுத்தில் கட்டிக்கொண்டு, மரண பூமியில் தாயக விடுதலைக்காக தங்கள் உயிர்களை தாரை வார்த்துக் கொடுக்க வீட்டுக்கு ஒரு வீரப்புதல்வனும், வீரப்புதல்வியும் சூளுரைத்து களத்தில் நிற்கின்றனர்.

தமிழ் இனத்தின் தன்மான முகவரியாகி உள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் தமிழீழ விடுதலைப் போரில் வெல்வார். தமிழீழத்தைப் பிரகடனம் செய்து தமிழ்த் தேசிய அரசை அமைப்பார். அந்த நாளையும் இப் பூவுலகம் காணத்தான் போகிறது. இரத்தத்தைச் சிந்தி, உயிர்களைத் தந்து விடுதலைப்புலிகள் களத்தில் போராடும் நேரத்தில் உலகு எங்கும் உள்ள தன்மானத்தமிழர்கள் தங்களால் இயன்ற விதத்திலெல்லாம் விடுதலைப் போருக்கு உதவ வேண்டியது தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரின் கடமையாகும்.

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்களை அவர்களின் சகோதரனாகிய வைகோ வேண்டுவது எல்லாம் ஆண்டுகள் பலவாக தமிழீழ விடுதலைப் போருக்கு தோள் கொடுத்து வந்துள்ள நீங்கள் வான்படை மூலமும், கடற்படை மூலமும், தரைப்படை மூலமும், சிங்களப் படைகளை எதிர்த்து பல நாடுகளிலிருந்து சிங்களவர் வாங்கிக் குவித்த ஆயுத பலத்தை எதிர்த்தும், சிங்களவர் உருவாக்கிய துரோகத்தை முறியடித்தும். உச்சக் கட்டப் போரை புலிகள் எதிர்நோக்கி உள்ள இந்த நேரத்தில் அவர்களுக்கு முழு அளவில் துணை நிற்க முன்வாருங்கள். உலகத்தின் மிகப் பழமையான இனமான தமிழ் இனத்தில் நாகரிகம், கலாசாரம், பண்பாடு அனைத்தையும் காக்கின்ற தளமாக தமிழீழம் தான் இருக்க முடியும் என்ற ஒரே நம்பிக் கையை உறுதியாகக் கொண்டுள்ள எனது இதய வாழ்த்துக்களை பொங்கு தமிழ் எழுச்சி விழாக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். (அ)

## ஆங்கில மொழிமூலப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் எதிர்வரும்18, 19 ஆம் திகதிகளில் நடாத்தப்படவிருந்த தரம் 11 ஆங்கிலமொழி மூலப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என யாழ். கல்வி வலயம் அறிவித்துள்ளது. இதேவேளை பழைய நேர அட்டவணைப்படி ஓகஸ்ட் 1ஆம், 2ஆம் திகதிகளில் நடைபெறும். வினாத்தாள் பொதிகளை 30 ஆம் திகதி பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டது. (சு)

## ஆங்கில தினப்போட்டிகள்

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஆங்கில தினப் போட்டிகளில் வாய்மொழி மூலம் போட்டிகள், யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இம் மாதம் 21 ஆம் திகதி காலை 8.30 மணிமுதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது.

இதில் தரம் 3 இலிருந்து தரம் 11 வரையான ஆங்கிலப் பாடல் நிகழ்ச்சிகள் காலை 8.30இலிருந்து நண்பகல் 11.50 மணி வரை இடம்பெறும் தரம்12, தரம்13 ஆகியவைகளுக்கான ஆயத்தப்படுத்தப்பட்ட பேச்சு, உடன் ஆயத்தப்படுத்தும் பேச்சு ஆகியன 11.50 முதல் 1.10 வரையும், 1.40 இலிருந்து 5 மணிவரை ஆரம்ப, கனிஷ்ட நாடகங்களும் சிரேஷ்ட சம்பாஷணை, சிரேஷ்ட பாடல்களும் இடம்பெறும். (ஓ)

## யாழ். போதனா வைத்தியசாலையில் நந்தவனம் – திறப்பு விழா

யாழ். போதனா வைத்தியசாலை குழந்தை வைத்திய பிரிவினரின்முயற்சியால் உருவாக்கப்பட்ட குழந்தைகள் நலனுக்காக புதிய நந்தவனம் 21ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.00மணிக்குயாழ் அரசாங்க அதிபர் கே. கணேஷால் திறந்து வைக்கப்படவுள்ளது. பல்வேறு நலன்விரும்பிகளினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் நிதி உதவியுடன் உருவாக்கப்பட்ட இப்பூங்கா யாழ். போதனா வைத்திய சாலை குழந்தைகள் விடுதியின் அருகாமையில் அழகாகவும் காற்றோட்ட வசதியுள்ளதாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

நோய்வாய்ப்பட்ட குழந்தைகள்வைத்தியபிரிவு விடுதியில் தங்கியிருக்கும் குழந்தைகளின் உடல் உள ஆரோக்கியத்திற்கு இப் புதிய நந்தவனம் பெரிதும் துணைபுரியுமெனவும் இம் முயற்சிக்கு உதவியோர்பெரிதும் நன்றி பாராட்ட வேண்டியவர்கள் எனவும் யாழ். போதனா வைத்தியசாலை குழந்தைவைத்தியநிபுணர் வைத்திய கலாநிதிஎஸ்.கே.அருள்மொழி தெரிவிக்கின்றார். (அ)

## சாரதா சேவாச்சிரமத்துக்கு கிளைகள் கிடையாது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்துக்கு கிளைகள் எதுவும் கிடையாதென சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்துள்ளார். (ஓ)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் தனது 89 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை சனசமூக நிலைய மைதானத்தில் விளையாட்டுப் போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது. திருமதி தேவகி துரைராஜா தலைமையில் நடைபெறும் இவ்விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கோப்பாய் கல்வியியற் கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் சரா புவனேஸ்வரன் கலந்துகொள்கிறார். போட்டிகள் அனைத்தும் சனசமூக நிலைய மைதானத்தில் பிற்பகல் 1மணிக்கு ஆரம்பமாகும். (அ-4)

## உலக இளைஞர்தின நிகழ்வில் பங்கேற்க யாழ். இளைஞர்கள் இருவர் அவுஸ்.பயணம்

(யாழ்ப்பாணம்)

உலக இளைஞர் தின ஒன்றுகூடலுக்காக யாழ்.மறை மாவட்டத்திலிருந்து இரு இளைஞர்கள் அவுஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளனர்.

உலக ரீதியான இளைஞர் தினம் இந்த ஆண்டு அவுஸ்திரேலியாவின் சிட்னி மாநிலத்தில் இடம்பெறுகிறது. இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்காக திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ற் அவுஸ்திரேலியாவிற்கு சென்றுள்ளார்.

உலகின் பல பாகங்களிலிருந்தும் இளைஞர் தின விழாவில் பங்குகொள்ளும் முகமாக பலர் சிட்னி மாநிலத்தில் கூடியிருக்கிறார்கள். இவ் ஒன்றுகூடலில் திருத்தந்தை 16ஆவது ஆசீர்வாதப்பர் சிறப்பு ஆசி உரை ஆற்றவுள்ளார். திருத்தந்தையின் இப் பயணம் பற்றி வத்திக்கான் வெளியிட்ட அறிக்கையில் இன்றைய இளையோர் நாளைய நம்பிக்கையின் சின்னங்கள், ஆகவே அவர்களை ஆன்மீக ரீதியில் பக்குவப்படுத்துவதின் முக்கியத்துவத்தை உணர்த்தவே திருத்தந்தையின் பயணத்தின் நோக்கமெனக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.மறை மாவட்டத்திலிருந்தும் இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்காக டொமி னிக் ஜொனி மற்றும் யமிஸ் தாஸ் தினோற்றி மஸ் ஆகியோர் கடந்த 12 ஆம் திகதி அவுஸ்திரேலியா சென்றுள்ளார்கள் என யாழ் ஆயரின் செயலரும் பாது காவலன் பத்திரிகையின் ஆசிரியருமான அருட்திரு எஸ்.ஏ.றொஷான் தெரிவித்தார். (ச)

# ராஜீவ் காந்தியை தாக்கிய இராணுவ வீரனே உண்மையான தேசப்பற்றாளன் -ஜே.வி.பி.செயலாளர் ரில்வின்

(கொழும்பு)

தாய்நாட்டைக் காட்டிக்கொடுத்து அதனை அன்னியருக்கு விற்றுவிட துணிந்து விட்ட எவரும் இந்நாட்டின் தலைவராகவோ அல்லது தம்மை தேசப்பற்றாளன் என சித்த ரித்துக் கொள்ளவோ தகுதியற்றவர்கள். அவ்வாறானவர்களை மீண்டும் மீண்டும் தலைமைப் பதவியில் அமர்த்துவதன் ஊடாக எமது நாட்டுக்கான தேசிய விடுதலையைப் பெற்று நாட்டைக் காப்பாற்ற முடியாது என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

சூழ்ச்சியான ஒப்பந்தத்தின் மூலம் இந்திய அதிகாரத்தை இலங்கை மீது திணித்த முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியை துப்பாக்கிக் கட்டையால் தாக்கி தனது எதிர்ப்பைத் தெரிவித்த இராணுவ வீரனே உண்மையான தேசப்பற்றாளன் என்றும் அவர் கூறினார்.

இந்தியாவின் இளம் சுதந்திரப் போராளியும் தியாகியுமான பகவத்சிங் பெயரிலான சுதந்திர வரலாறு அடங்கிய நூலினை ஜே.வி.பியின் சோஷலிச இளைஞர் சங்கம் நேற்று முன்தினம் வெளியிட்டு வைத்தது.

இந்நிகழ்வு சங்கத்தின் தேசிய அமைப்பாளரும் ஜே.வி.பி.எம்.பி.யுமான பிமல் ரட்ணாயக்க தலைமையில் கொழும்பு 7இல் அமைந்துள்ள பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற போது அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ரில்வின் சில்வா மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது,


இந்தியாவின் சுதந்திரத்துக்காக ஆயுதம் ஏந்திப் போராடிய பகவத்சிங்கின் போராட்டத்துக்கு மகாத்மா காந்தியின் அஹிம்சை வழிப் போராட்டம் முட்டுக்கட்டையாக இருந்தது. அதேவேளை, இந்திய சுதந்திரத்துக்காக இரத்தம் சிந்தியவர்கள் புறந்தள்ளப்பட்டு வெறுமனே போராட்டங்களை நடத்தியவர்களிடம் இந்தியா ஒப்படைக்கப்பட்டது.

இந்தியரும் இலங்கையரும் மகாத்மா காந்தியை இந்தியாவின் தந்தை என வர்ணிக்கப்படுவதில் எந்த அர்த்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. சுதந்திரம் எனும் போது பிரித்தானியாவின் ஏகாதிபத்தியத்திடம் இருந்து விடுதலை பெற்றதை மட்டும் வரையறுத்துக் கொள்ளக்கூடாது. இலங்கை நாட்டுக்குள் சுதந்திரம் பறி போயிருக்கின்றது. உழைக்கும் வர்க்கத்தினரின் சுதந்திரம் பறி போயிருக்கின்றது. அரச சொத்துக்கள் விரயமாக்கப்படுகின்றன. இலங்கையின் நிலப் பரப்புக்கள் அந்நியருக்கு விற்கப்படுகின்றன. இலங்கையின் எண்ணெய் வளம் இந்தியாவுக்கு தாரை வார்த்துக் கொடுக்கப்படுகின்றது. சம்பூர் அபிவிருத்தித் திட்டம் இந்தியாவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இதேபோல் 1987 ஆம் ஆண்டு கொல்லப்பட்ட இந்திய அமைதி காக்கும் படையினருக்காக பாராளுமன்ற கட்டடத்துக்கு அருகாக நினைவுத்தூபி அமைக்கப்படுகின்றது.

இவைகளை வைத்துப் பார்க்கும் போது அரசியல் இலாபத்துக்காகவும் சுய இலாபத்துக்காகவும் அரச உடைமைகள் விற்கப்படுவதுடன் நாடும் காட்டிக் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறான பயங்கரத்தில் இருந்து விடுவிக்கப்படும் போதே உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்க முடியும்.

உழைக்கும் வர்க்கத்தினரின் சம்பளக் கோரிக்கையை நிறைவேற்ற மறுக்கின்ற அரசாங்கம் கோடிக்கணக்கான பணத்தை செலவிட்டு மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

இன்றைய தலைவர்கள் தேசப்பற்றாளன் என தம்மை சித்திரித்துக்கொண்டு ஒருவித மாயையை உருவாக்கி இருக்கின்றமை இல்லாதொழிக்கப்படவேண்டும். வளங்களை விற்று தேசத்தைக் காட்டிக்கொடுப்பவர் எவராக இருந்தாலும் அவர் இந்த நாட்டுக்கு தலைவனாக இருக்கும் அருகதையற்றவராகிறார். ஊழலும் மோசடியும் நிறைந்த



அரசாங்கத்தை தோற்கடித்து எதிர்கால வளமான இலங்கையை உருவாக்குவதில் பகவத்சிங் போன்ற இளைய தலை முறையினர் முன்வரவேண்டும். தலை வர்களை நியமிக்க முடியும் ஆனால் நாட்டு பற்றுள்ள தலைவராக அவர் இருக்க வேண்டும். நாட்டுப்பற்றுள்ள தலைவரை உருவாக்க வேண்டிய தேவை இப்போது எழுந்துள்ளது.

அவ்வாறான ஒரு தலைமையை உருவாக்குவதன்மூலம் வர்க்கபேதம், இனபேதம் அற்ற ஒரு சுபீட்சமான இலங்கையைக் கட்டியெழுப்பமுடியும். இதனை நனவாக்க வேண்டுமானால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ்வின் கொள்கைகளை பின்பற்றவேண்டிய அவசியம் இல்லை என்றார். (அ)

## இராணுவ நடவடிக்கை காரணமாக
## முல்லைத்தீவு மாவட்டத்தில் எண்ணாயிரம் குடும்பங்கள் இடப்பெயர்வு -அரச அதிபர் திருமதி எமில்டா சுகுமார்

விடுதலைப் புலிகளின் பிரதேசமாகிய வன்னிப் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக இராணுவத்தினர் மேற்கொண்டுள்ள தாக்குதல் நடவடிக்கைகளையடுத்து முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு துணுக்காய் உதவி அரசாங்கஅதிபர் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்துள்ளதாக முல்லைத் தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி எமில்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தின் மடு மற்றும் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து சுமார் ஆறாயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்து மன்னார் மாவட்ட எல்லைப் பகுதிகளிலும் கிளிநொச்சி மாவட்டப் பகுதிகளிலும் தஞ்சமடைந்துள் ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதே போன்று வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் 90 வீதமான மக்கள் இடம் பெயர்ந்துள்ளதாகவும் வவுனியா செயலகப் பிரிவின் வடபகுதியில் -ஓமந்தை சோதனைச் சாவடிக்கு அப்பால் உள்ள பிரதேசங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் யுத்தநிலைமைகள் காரணமாக இடம்பெயர்ந்துள்ளதாகவும் வவுனியா அரசாங்க அதிபர் எஸ்.சண்முகம் தெரிவித்தார். இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண உதவிகளை வழங்குவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாக அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஓமந்தை சோதனைச் சாவடி ஊடாக நாளொன்றிற்கு 20 லொறிகள் மாத்தி ரமே அனுமதிக்கப்படுவது, அத்தியாவசியப் பொருட்களை வன்னிப்பகுதிக்கு கொண்டு செல்வதற்குரிய பாதுகாப்பு அமைச்சின் அனு மதியைப் பெறுவதில் உள்ள நடைமுறை தாமதம் உட்பட பல்வேறு காரணங்களினால் நிவாரண உதவிகளை வன்னிப்பிரதேசத் திற்கு உரிய நேரத்தில் உரிய அளவில் கொண்டு செல்வதில் தாமதம் ஏற்பட்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## மூன்று நாட்டு தலைவர்களின் பாதுகாப்பிற்கு தலா மூன்று விசேட ஹெலிகள் வருகின்றன?

(கொழும்பு)

கொழும்பில் நடைபெறவுள்ள 15ஆவது சார்க் மாநாட்டில் கலந்துகொள்ளவிருக்கின்ற மூன்று நாடுகளைச் சேர்ந்த தலைவர்களின் பாதுகாப்பிற்காக அந்தந்த நாடுகளிலிருந்து மூன்று விசேட ஹெலிகொப்டர்கள் வருகை தரவுள்ளதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இலங்கையின் வான் பாதுகாப்பை கருத்தில் கொண்டே இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்துள்ள ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளின் தலைவர்களின் பாதுகாப்பிற்காகவே அந்தந்த நாடுகளிலிருந்து மூன்று விசேட ஹெலிகொப்டர்கள் வருகை தரவுள்ளதாகவும் அதில் இரண்டு ஹெலிகொப்டர்கள் பாதுகாப்பு வழங்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்தந்த நாடுகளை சேர்ந்த விமான படைகளுக்கு சொந்தமான விசேட ஹெலிகொப்டர்களுடன் அந்நாட்டு விமானப்படையினரும் வருகைதரவுள்ளனர்.

அவர்கள் இலங்கை விமான படையினருடன் இணைந்து இலங்கை வான் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு விசேட விமானங்கள் மூலமாக வருகை தருகின்ற மூன்று நாடுகளைச் சேர்ந்த தலைவர்களும் அங்கிருந்து கொண்டுவரப்படுகின்ற விசேட ஹெலிகள் மூலமே கொழும்பிற்கு வருகை தரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எனினும் இந்த மாநாட்டில் பாகிஸ்தான் ஜனாதிபதி பங்கேற்கமாட்டார் என்று மற்றொரு தகவல் தெரிவிக்கின்றது.


மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கின்ற தலைவர்கள் தங்களின் பாதுகாப்பிற்காக சிறு குழுவினரை தம்முடன் அழைத்து வரலாம் என்று அரசாங்க தரப்பினர் அண்மையில் தெரிவித்ததுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் இந்தியாவிற்கு சென்றிருந்த சமயம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வாரம் ஓர் யாழ்ப்பாணத்து மூலிகை

### முடக்கொற்றான்

Botanical Name - Cardiospermum halieacabum
Family - Sapindaceae
Engl - Ballon vine
Sinh - Penela - Wel

இது ஒரு பருவ ஏறுகொடி. மஞ்சரியிலுள்ள அடிமலர்கள் பற்று கம்பியாக மாறி படருவதற்கு உதவுகின்றது. தண்டு மற்றும் கிளைகளில் மென்வரிகள் காணப்படுகின்றன. இலை கூட்டிலை முட்டை வடிவின ; சிற்றிலையின் மடல் பிளவுற்றலை. மலர்கள் சிறியவை, குடை போன்று குலிந்த மஞ்சரிகளாக உள்ளன. வெள்ளை நிறம் ; கனி பேரிவடிவினது ; அழுங்கியது ; தூவிகளுடன் மூன்றாக அமைந்தது; பலூன் போன்று வீங்கியது. எனவே ஆங்கிலத்தில் Ballon vine எனப்படுகிறது. கறுப்பு நிறத்திலான விதைகளை உடையவை.



யாழ். மாவட்டத்தில் பொதுவாக வேலிகளில், புதர்களில் படர்ந்து வளரும் ஓர் களைச் செடியாகும். விதைகள் மூலம் இன விருத்தி செய்யலாம்.

மருந்துச் சத்துக்கள்

100 கிராம் இலையில் உள்ள சத்துக்கள்.
புரதம் 4 . 7 கிராம்
கொழுப்பு 0 . 6 கிராம்
மாச்சத்து 9 . 1 கிராம்
கனிமங்கள் 2 . 3%

மருத்துவப் பயன்கள்

1). இதன் முழுக்கொடியையும் நன்றாகக் கழுவி, இரசம் வைப்பதற்குரிய சரக்குகளுடன் சேர்த்து புளி நீங்கலாக இரசம் வைத்து காலையில் குடித்துவர வாதநோய்களில் ஏற்படும் வலி தணியும்.

2). அரிசி, உளுத்தமாவை அரைப்பதுடன் இதன் இலைகளையும் சேர்த்தரைத்து தோசை சுட்டு உண்ணலாம். அல்லது மற்றக் கீரைகளுடன் சேர்த்து சமைத்தும் உண்ணலாம். அல்லது இவ் இலைகளை எடுத்து சட்டியிலிட்டு தண்ணீரிலிட்டு சுண்டக்காய்ச்சி வேளைக்கு 30. மி.லி வீதம் தினம் 2 வேளை 3 நாட்கள் அருந்தி வர நரம்பு சம்பந்தமான பிடிப்பு மூலம், இருமல் தீரும்.குடல் சுத்தியாகும்.

3).இதன் இலைகளை ஆமணக்கு எண்ணெயில் வதக்கி கீழ்வாதம், வீக்கம் முதலியவற்றிற்கு வைத்துக் கட்டலாம்.

4). இக் கொடியில் சாற்றை கை, கால் விறைப்பிற்கு பூசலாம்.


5).இலைகளை எண்ணெயிலிட்டு காய்ச்சி வலிகளுக்கு பூசலாம்.

இதன் தண்டுக் குடிநீர் காய்ச்சலை நீக்கும் தன்மையுடையது.

குறிப்பு

எமது பிரதேசத்தில் சிலர் முடக்கொற்றானுக்கு பதில் வேறு ஓர் கொடியை பயன்படுத்துகின்றார்கள்.

அது முடக்கொற்றான் அல்ல. அதன் விபரம்,



தமிழ்ப் பெயர் - எருமைக்கொத்தான்.
Botanical Name - Cassy_tha filiformis
Family - Cassy thaceae
Engl - Love - vine.

இது ஓர் ஒட்டுண்ணித்தாவரமாகும். (Parasite)இத் தாவரத்தின் குடிநீரால் தோல்வியாதிகள் தீரும்.

குடற்பூச்சிகள் அழி யும். சிறுநீரை பெருக்கும் தன்மையும் உண்டு. தென்னிந்திய மக்கள் மோர், தயிர் போன்ற வற்றில் இக்கொடியை ஊறவிட்டு வடித்து அருந்துகின்றனர்.

இதன் சாற்றை நல்லெண்ணெய்யுடன் சேர்த்து காய்ச்சி தலைக்கு வைக்க மயிர்க் கால்கள் பலப்படும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

## கட்சியின் தலைமைப் பதவியை விட்டுக்கொடுக்கத் தயார்
## கருணா அறிவிப்பு

தமது கட்சிக்குள்சிறந்த தலைவர் ஒருவர் உருவாகும் போது தனது தலைமைப் பதவியை விட்டுக்கொடுக்கத்தயார் என தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் தலைவர் விநாயக மூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் பொதுமக்களுடனான சந்திப்பில்பங்கேற்றஅவர் தமது அமைப்பில் சிறுவர்கள் இணைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை மறுத்துரைத்தார். இதேவேளை, தாம் நாட்டில் இல்லாத நேரத்தில் இடம்பெற்ற இரண்டு தேர்தல்களிலும் தமது கட்சியை வெற்றிபெறச்செய்த மக்களைச் சந்தித்து நன்றிகூறும் முகமாகவே மட்டக்களப்பிற்கு விஜயம் செய்ததாகவும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார். (அ-5)

கலாசாரம் என்னும் மங்கை ஓர் இனத்திற்கு மட்டும் சொந்தமானவள். அவளை கௌரவப் படுத்துவதோ அன்றி அகௌரவப்படுத்துவதோ அந்த இனத்தின் நடத்தையைப் பொறுத்தது.

–பிளேட்டோ

வலம்புரி

# கலாசாரச் சீரழிவைத் தடுக்க சமூகக் கண்காணிப்புத் தேவை

யாழ்ப்பாணத்தில் கலாசார சீரழிவு தலை தூக்குவதாக பலரும் கவலை வெளியிட்டுள்ளனர்.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரையில் கலாசார சீர்கேடு புரையோடியிருப்பதான தகவல்கள் அதிர்ச்சி தருவனவாகும்.

குறிப்பாக பாடசாலை மாணவர்களிடையே ஆபாசப்படங்கள் அடங்கிய இறுவட்டுக்கள் கையாளப்படுவதாகவும், யாழ்ப்பாணத்தில் இத்தகைய இறுவட்டுக்கள் சில அரச நிறுவனங்களில் கூட காணப்படுவதாகவும் வெளிவரும் செய்திகள் யாழ்ப்பாணத்தின் எதிர்காலக் கலாசாரம் குறித்த பயத்தை ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய கலாசார சீரழிவுகள் குறித்து கவலை வெளியிடுவதால் எந்தப் பிரயோசமும் ஏற்படப்போவதில்லை என்பது தெரிந்த விடயமே.

மாறாக, கலாசார சீரழிவுக்கான மூலத்தை கண்டறிந்து அதனைச் சங்காரம் செய்வதன் மூலமே பெருமைக்குரிய யாழ்ப்பாணப் பண்பாட்டை காப்பாற்ற முடியும்.

இந்தப் பாரிய பணியைச் செய்வதென்பது சாதாரணமான விடயமன்று. இதில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், உறவுகள் உள்ளிட்ட சமூகக் கண்காணிப்பு அவசியமாகின்றது.

அதிலும் பிள்ளைகளின் ஒழுக்கமான நெறிப்படுத்தலில் பெற்றோரின் கண்காணிப்பென்பது அதி முக்கியமானதாகும்.

சமகாலத்து கணனியுகம் பெற்றோர்களிடையும் பிள்ளைகளிடையும் ஓர் தலைமுறை இடைவெளியை ஏற்படுத்தி விடுகின்றது.

இதனால் பிள்ளைகள் தொடர்பில் பெற்றோரின் கண்காணிப்பு மந்தமடைகின்றது. இதற்கு மேலாக இணையத்தளம், கையடக்கத் தொலைபேசிகள் போன்றவற்றின் அதீதமான பயன்படுத்தல் பிள்ளைகளை தவறான பாதைக்கு இட்டுச் செல்லும்.

தொடர்பாடல் வசதி கருதிப் பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு கையடக்கத் தொலைபேசி வசதியினை ஏற்படுத்திக் கொடுத்திருந்தாலும் அதன் பயன்படுத்துகை எவ்வாறுள்ளதென்பதை அறிய முற்படாத காரணத்தினால் பிள்ளைகள் தவறான பாதைக்குச் செல்லும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகின்றது.

தொலைக்காட்சிகளின் பெருக்கம், ஆபாசமான திரைப்படங்களின் ஆதிக்கம் போன்றவை பிள்ளைகள் தவறு விடுவதைத் தூண்டி விடுகின்றன.

அது மட்டுமன்றி தவறுகளை நியாயப்படுத்தவும், தவறுகளுடனான வாழ்க்கையில் மகிழ்வடைவதுமான ஓர் வக்கிர சமூகம் உருவாகி வருகின்றது.

இதனை அடியோடு வெட்டிச் சரிப்பது எம் எல்லோரினதும் கடமை. பெற்றோர்கள் தம் பிள்ளையின் மீது அதீதமான கண்காணிப்பை மேற்கொள்வதும்; ஆசிரியர்கள், மாணவர்களுக்கு நேரிய பாதையை வழிகாட்டுவதும் கட்டாயமானதாகும்.

இவை உறுதி பெறும்போது எமது உயர் கலாசாரத்தின் பெறுமானத்தை நிச்சயம் காப்பாற்ற முடியும்.

# அனைத்துலக கண்காணிப்புக்குழு இலங்கையில் அமைக்கப்பட வேண்டும்

## அமெரிக்க காங்கிரஸ் சபை தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் மோசமடைந்து வரும் மனித உரிமைமீறல்களை கண்காணிப்பதற்குஅனைத்துலக கண்காணிப்பாளர் குழு அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அமெரிக்க அரசாங்கமும் அனைத்துலக சமூகமும் ஆதரிக்கவேண்டும்என்று காங்கிரஸ் சபைதனது தீர்மானத்தில் தெரிவித்துள்ளது.

காங்கிரஸ்சபையைச் சேர்ந்த கலிபோர்னியா பிரதிநிதி பிராட்சேர்மன், நியூ ஜேர்சி உறுப்பினர் பிராங் பலோன் ஆகியோரினால் பரிந்துரை செய்யப்பட்ட 1,338 ஆவது சரத்தில் இலங்கை அரசு, துணை இராணுவக் குழு, அமெரிக்க அரசு, விடுதலைப் புலிகள் ஆகியோருக்கான செய்தி உள்ளது.

இது தொடர்பில்அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசுடன் இணைந்து செயற்பட்டு வரும் துணைஇராணுவக் குழு வொன்று மிகவும் அதிகமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகின்றது. மோதல்களில் ஈடுபட்டுவரும் எல்லாத்தரப்பினரும் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதாக குற்றச்சாட்டுக்கள் உள்ளன. நீதிக்குப்புறம்பான படுகொலைகள், பொதுமக்களின் வாழ்விடங்கள் மீதான எறிகணை வீச்சுக்கள் மற்றும் குண்டு வீச்சுக்கள், மனிதாபிமானப் பணிகள் மீதான தடைகள், இடம்பெயர்ந்த மக்களின் நடமாட்டங்கள் மீதானதடைகள் என்பன இலங்கையில் அதிகரித்துள்ளன. விடுதலைப்புலிகளும் துணை இராணுவக் குழுவினரும் சிறார் படைச் சேர்ப்பை நிறுத்த வேண்டும். இலங்கை அரசு போரை நிறுத்த வேண்டும். இராணுவத் தீர்வைவிடுத்து அரசியல் தீர்வை மேற்கொள்வதுடன்,வடபகுதிக்கு உதவிப் பொருட்கள் செல்வதற்கு அரசு அனுமதிகள் வழங்கப்படவும் வேண்டும்.

காணாமல்போனோர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் மனிதாபிமானப் பணியாளர்கள் மீதானதாக்குதல்களை மேற்கொள்வோர் மீதான விசாரணைகளை இலங்கை அரசு மேற்கொள்ளவேண்டும்.

தமிழ்மற்றும்முஸ்லிம்மக்களின் அபிலாஷைகளையும் இடம்பெயர்ந்த மக்களுக்கானபாதுகாப்பான வாழ்க்கையையும் அரசுஉடனடியாக நிறைவேற்ற வேண்டும். 25வருடகாலப் போரில் 75ஆயிரம் மக்கள்கொல்லப்பட்டுள் ளனர். அவர்களில்பெரும்பாலானோர தமிழ்மக்கள் 1.5மில்லியன் மக்கள் புலம் பெயர்ந்துள்ளனர். மோதல்களினால் அவர்கள்பலவந்தமாக இடம் பெயர்ந்துள்ளனர்.

2006ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் 2002ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட போர்நிறுத்த உடன்பாடு முறிவடைந்ததைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான மக்கள்கொல்லப்பட்டதுடன், 2இலட்சம்பேர்இடம் பெயர்ந்துள்ளனர்.

பேச்சுக்களை மீளஆரம்பிப்பதை புறம் தள்ளியுள்ள அரசு இராணுவத் தீர்வைமுதன்மைப்படுத்தி வருகின்றது. அரசின் இந்த அணுகுமுறை காணாமல் போவோரின்தொகையை அதிகரித்து வருகின்றது. மனிதாபிமானப் பணியாளர்களின் செயற்பாட்டையும் இது மட்டுப்படுத்தி வருகின்றது.

எனவே இலங்கையில் அனைத்துலக கண்காணிப்பாளர்கள் குழு அமைக்கப்படுவதை அரசுஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற அழுத்தத்தை அமெரிக்க அதிபர் ஜோர்ச்புஷ் வெளிப்படையாக மேற்கொள்ள வேண்டும் என்றுஅதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பாடசாலை மாணவர்களுக்கான இலவச மூக்குக்கண்ணாடி வழங்குதல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கல்வி வலயத்தில் கரவெட்டி கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் பார்வைக் குறைபாடுடைய 150 வறியமாணவர்களுக்கு கரவ்வ அபிவிருத்தி ஒன்றியத்தினால் இலவச மூக்குக்கண்ணாடிகள் வழங்கப் படவுள்ளன.

பார்வைக்குறைபாடுடைய மாணவர்களை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையை சேர்ந்த பொதுச்சுகாதார பரிசோதகர்கள் தெரிவு செய்திருந்தனர். பின்னர் கரவை அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை கண் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.குகதாசன் பரிசோதித்து மூக்குக் கண்ணாடிக்கான சிபார்சுகளை வழங்கியிருந் தார்.

இவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகளை கரவை அபிவிருத்தி ஒன்றியம் தனது நிதியத்திலிருந்து வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் வைபவம் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கரவவெட்டி தட்சை ஐங்கரன் அறநெறிப் பாடசாலையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா , சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலாளர் சி. சத்தியசீலன், கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் க. அம்பலவானர், பருத்தித்துறை பதில் சுகாதார வைத்திய அதிகாரி எம்.ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

# அரச தலைவர்களின் விஜயத்தின் போது கட்டுநாயக்க கொழும்பு வீதி மூடப்படும்

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து அரச தலைவர்கள் வருகை தருகின்ற நேரத்தில் மட்டும் கட்டு நாயக்க முதல் கொழம்பு வரையிலான வீதிகள் சுமார் 20 நிமிடங்கள் வரை தற்காலிகமாக மூடியிருக்கும் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இது குறித்து பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இதர முக்கியஸ்தர்கள் வருகை தருகின்ற போது வீதியின் ஒரு பக்கம் மட்டும் பொதுமக்களின் பாவனைக்காக திறந்து விடப்பட்டு வாகனங்களும் அனுமதிக்கப்படும் இதேவேளை காலியிலிருந்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை நோக்கி செல்கின்ற ரயில் பம்பலப் பிட்டி ரயில் நிலையத்தில் நிறுத்தப் படும்.

கண்டி மற்றும் ஏனைய இடங்களிலிருந்து கொழும்புகோட்டையைநோக்கி வருகின்ற சகல ரயில்களும் மருதானை ரயில் நிலையத்தில் நிறுத்தப்படும். ரயில் பயணிகள் பம்பலப்பிட்டி, மருதானை ஆகிய இடங்களிலிருந்து பஸ்கள் மூலம் தங்களது பயணங்களைதொடரலாம்.

இதேவேளை,ஆகஸ்ட்மாதம் 3ஆம் திகதி பாராளுமன்றம் சுற்றுவட்டம் முதல் பாராளுமன்றம் வரையிலும் பெலவத்தை சந்திவரையிலான வீதிகள் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

(அ-5)

# மானிட சேவையே மாதவ சேவை–பகவான் பாபா



மனிதன் கடவுளாகலாம். ஒவ்வொரு மனிதனுள்ளும் இறைவன் வாழ்கிறான். என்பதே உலக மாதாவான சாயி மாதாவின் அரும் போதனையாகும். இதனை எண்ணியே ஒவ்வொருவரும் தன்னால் இயன்ற உதவியை மற்றவருக்கு வழங்க வேண்டும் என்கிறார் சுவாமி. சேவை என்பது இரண்டு எழுத்தாலான சொல் என்னும் அதில் மதிப்பிடமுடியாத மதிப்பு இருக்கிறது. மானிட சேவையே மாதவ சேவை என்பதற்காக இறைவனே மானிட வடிவமெடுத்து மானிடனுக்கு சேவை செய்ய அவதரித்துள்ளார் என்றால் சேவையின் மகத்துவம், அதன் கனதி சொல்லும் தரமன்று.

சேவையென்பது மற்றவர் கண்டு மெச்சும்படி செய்வதல்ல. எந்தச் சமயத்தில் எவருக்கு என்ன செய்யவேண்டுமோ அதை அவருக்கு திருப்தியுறச் செய்வதே சேவை. நல்ல சேவையாளனை பகவானே தன்னிடம் அழைக்கிறார். தனது தரிசனத்தையும் ஆசியையும் வழங்குகிறார். இதனை உணர்த்தும் அதிசயம் எம் மண்ணிலேயே நிகழ்ந்துள்ளது.

மக்கள் சேவையே மாதவசேவை என்றெண்ணி பகவானின் சிந்தனையோடு சேவை யாற்றி வருபவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டாக்டர். திருநாவுக்கரசு. இவரையும் அவருடைய துணை வியாரையும் தன்னிடம் வரும்படி வெளிநாட்டில் இருந்து வந்த குடும்பம் ஒன்றின் மூலமாக அழைப்புக் கடிதம் கொடுத்தனுப்புகி றார் பகவான். முன்பின் தெரியாத குடும்பம். பகவானையும் ஏற்கனவே பார்த்ததில்லை அப்படியிருந்தும் அக்குடும்பம் டாக்ரின் வீடு தேடிச் சென்று, பகவான் உங்களை தன்னிடம் வரும்படி கடிதம் ஒன்று தந்துள்ளார். மறுக்காமல் புட்டபர்த்தி போக வேண்டும் என்று கூறி விட்டு போய்விட்டார்கள். முதலில் பகிடியாக எடுத்துக்கொண்ட டாக்டர் கடிதத்தை உடைத்து பார்த்தபோது, பகவான் கைப்பட எழுதிய அழைப்புக் கடிதமும் ஒரு பெருந்தொகைப் பணமும் அதற்குள் இருந்தது. படபடப்பும் ஆனந்தமும் மேலெழ தனது துணைவியாரிடம் காண்பித்தார்.

அச் சமயத்தில் டாக்ரின் தந்தையார் தனது 95 வயதில் நோய்வாய்ப்பாட்டு இறக்கும் தறுவாயில் இருந்தார். இந்தநேரத்தில் பகவானி டம் எப்படிச் செல்வது என்ற ஏக்கம். இது நிகழ்ந்த மூன்றாவது நாள் தந்தையார் காலமாகிவிட்டார். தந்தையின் அந்திய கால கடன் களை நிறைவு செய்து பகவானிடம் புறப்படத் தயாரானார்கள். தனது தந்தையாரின் அஸ்தியையும் கூடவே எடுத்துச் சென்று சித்திரா வதி நதியிலேயே கரைத்து பகவானின் பிரசாந்தி நிலையம் சென்று ஒன்பது நாட்கள் அங்கு தங்கி பகவானை தரிசனம் செய் தனர். எல்லாம் வல்ல பரந்த தெய்வம் சாயி தனது அற்புத லீலைகளால் உலகையே தன் வசம் ஆட்கொள்கிறார். அவ்வேளை மனிதனில் ஆன்மீகம் தழைத்தோங்கும் தர்மம் நீதி அவனை ஆளும். அப்படியே அவனது சந்ததியும் இறை சிந்தனை உள்ள நல்ல தொரு குடும்பமாக மாறுகிறது.

ஜெய்சாயிராம் யாதவன்.

# திருமணமாகி 6 மாதங்களில் காணாமல் போன கணவனை மீட்டுத்தருமாறு கோரிக்கை

(கொழும்பு)

ஏழுமாதங்களுக்கு முன்னர்காணாமல் போன தனது கணவனான மூக்கையா ரஞ்சன் (30வயது) என்ற இளம் குடும்பஸ்தரை கண்டு பிடித்துத்தர உதவுமாறு அவரது மனைவியானரஞ்சன் குமுதினி பிரதியமைச்சர் பெ.இராதாகிருஷ்ணனிடம் எழுத்து மூலம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

2007டிசம்பர்02ஆம் திகதி இரவு 10மணி முதல் தனது கணவன் காணாமல்.போயுள்ளதாகவும் அது குறித்து வத்தளை பொலிஸ் நிலையத்தில் புகார்செய்துள்ளதாகவும் அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

பலாலியைப் பிறப்பிடமாகவும் வத்தளையை வசிப்பிடமாகவும்கொண்ட இவர் காணாமல் போனஒரு மாதத்திற்குப்பிறகு பயங்கரவாதத்தடுப்பு பிரிவு இன்ஸ் பெக்டரானஆப்தீன்என்பவர்தனது கணவனைத் தேடி அவரின்சகோதர சகோதரிகளின் வீட்டில் விசாரித்து தன்னிடமும் விசாரித்ததாகவும் மனைவி தெரிவித்துள்ளார்.

இவர் காணாமல்போனது குறித்தது மனித உரிமைகள் ஆணைக்குழு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உட்படபல அமைப்புகளிடம் முறையிட்டும்பலன்கிடைக்க வில்லை. திருமணமாகி ஆறுமாதங்களாகிய நில்லையில் தனதுகணவன் காணாமல் போயுள்ளதால்இயல்பு வாழ்க்கையில் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன்.

எனதுகணவன் கடத்தப்பட்டாரா அல்லது காணாமல் போனாரா, கைதானாரா என்பதை அறிந்து அவரை விடுவித்துத் தருமாறு வேண்டுகிறேன். எனவும் அக்கடிதத்தில் மனைவி குமுதினி தெரிவித்துள்ளார்

(அ-5)

# ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் நீதி வழங்கப்படும் என்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

ஊடகவியலாளர் நாமல்பெரேரா, பிரித்தானிய உயர்ஸ்தானிகராலய அதிகாரி மகேந்திர ரத்னவீர ஆகியோர் தாக்கப்பட்டமை தொடர்பில் நீதிவழங்கப்படும் என ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சார்பில், ஜனாதிபதியின் செயலாளர் லலித்வீரதுங்க, பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் பத்திரிகை வெளியீட்டாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

உடகவியலாளர்கள் தமது கடைமையைச் செய்யும் பொருட்டு வன்முறைகள் மற்றும் அச்ச மற்றசூழலை ஏற்படுத்திக் கொடுக்குமாறு ஜனாதிபதி ஏற்கனவேபொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் இக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாமல் பெரேரா மற்றும் மஹேந்திர ரத்னவீர ஆகியோர் மீதான தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில்இருப்பவர்களைக் கண்டு பிடிப்பதற்கான சகல சாத்தியமான வழி முறை களையும் அரசாங்கம் மேற்கொள்ளும் எனும் எனது வாக்குறுதியை மீண்டும் ஒரு முறை ஞாபகப்படுத்துங்கள் என ஜனாதிபதி தன்னிடம் கூறியதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தான் எழுதியிருக்கும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.



ஊடகவியலா ளர்கள் மீதானதாக் குதல்கள்தொடர்பில் உரியகவனம் செலுத்து மாறு கோரி பத்திரிகை வெளியீட்டாளர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப் பி வைத்திருந்தகடிதத்தின் பதிற்குறியாகவே ஜனாதிபதியின்செயலாளரால் இந்தக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(அ-5)

# விளையாட்டுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு அமல அன்னை முன்பள்ளியின் வருடாந்த விளையாட் டுப்போட்டி நிகழ்வுகள் இன்று மாலை 2.30 மணிக்கு தென்கோவை மரியன்னை ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இயேசு சபை அகதிப்பணி (JRS) நிறுவனத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் அருட்பணி யூஜின் பெனடிக்ற் அடிகளார் கலந்து கொள்வார்.

(அ)

# களனிப் பல்கலைக்கழக உதவிப் பதிவாளரைக் காணவில்லை

(கொழும்பு)

களனி பல்கலைக் கழகத்தின் உதவிப்பதிவாளர் ஆர் .ராஜேஸ்வரன் கடந்த ஜூலை 4ஆம் திகதிமுதல் காணாமல் போயுள்ளார். காலையில்பணிக்குச்சென்றவர் மாலையில் வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வத்தளையில்உள்ளவாடகை வீடு ஒன்றில் இவர் வசித்து வந்தார்.

(அ-5)



சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டு போட்டி நிகழ்வில் சிறார்களின் பான்ட் வாத்திய இசையும், விநோத உடை போட்டியில் கலந்து கொண்ட சிறார்களையும் படங்களில் காணலாம். (படங்கள்-ஜனந்தா)

# ஈராக் இராணுவ ஆட்சேர்ப்பு நிலையத்தில் இரட்டை தற்கொலை குண்டு தாக்குதல்

## 35பேர் பலி ; 70 பேருக்கும் அதிகமானோர் காயம்

(பக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தின் வடக்கே



கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இரட்டைத் தற்கொலைக் குண்டுத்தாக்குதலில், குறைந்தது 35 பேர் பலியானதுடன் 70 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

பக்தாத்திலிருந்து 60 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பகுபாவில் இராணுவ ஆட்சேர்ப்பு நிலையமொன்றின் முன்பாக கூடி நின்றவர்களிடையே நுழைந்து மேற்படி தற்கொலைக் குண்டுதாரிகள் குண்டை வெடிக்கவைத்ததாகக் கூறப்படுகிறது.

தியலா மாகாணத்தின் தலைநகரான பகுபா, ஈராக்கின் வன்முறை அபாயம் நிறைந்த பிரதேசங்களிலொன்றாக விளங்கி வருகின்றது.

இந்த குண்டுத் தாக்குதலை நடத்திய வர்களில் ஒருவர் இராணுவ உடையில் இருந்ததாகவும் மற்றையவர் சாதாரண உடையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக் குண்டுத் தாக்குதல் சம்பவம் நடைபெற்றபோது, இராணுவ ஆட்சேர்ப்பு நிலையத்தின் நுழைவாசல் அருகே 30 பேருக்கும் அதிகமானோர் கூடி நின்றதாக இத் தாக்குதலில் காயமடைந்த பலாஹ் அலி ஹுசைன் (17 வயது) தெரிவித்தார்.

காயமடைந்தவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் இறந்தவர்களின் தொகை மென்மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

(அ)

# ஈரானைத் தாக்கினால் விபரீத விளைவு- இந்தியா

(புதுடில்லி)

ஈரான் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் விபரீத விளைவுகள் ஏற்படும் என்று அமெரிக்காவிற்கு இந்தியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈரான்நாடுசமீபத்தில்அதிநவீன ஏவுகணைகளை செலுத்தி சோதித்து பார்த்தது. இஸ்ரேலை குறி வைத்து இந்த ஏவுகணை சோதனை நடத்தப்பட்டதாக தெரியவருகிறது. இதனால் இரு நாடுகளிடையே போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஈரானை தாக்க தயாராக இருக்கும் படி இஸ்ரேலை அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது. இதற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது குறித்து டெல்லியில் நிருபர்களுக்கு பேட்டியளித்த செய்தி தொடர்பாளர் நவ்தேஸ் சர்னா கூறுகையில், ஈரானை தாக்கினால் விபரீத விளைவுகள் ஏற்படும் என்று எச்சரித்தார். ஈரான் மீது தாக் குதல் என்பது கவலையளிப்பதாகஉள்ளது என்றும் சர்வதேச ஒழுக்கத்திற்கு எதிரா னது என்றும் சர்னா கூறினார்.

(அ)

# உலக தரிசனம்

# ஊழல் குற்றச்சாட்டில் இத்தாலிய முன்னாள் நிதி அமைச்சர் கைது

(இத்தாலி)

முன்னாள் இத்தாலிய அமைச்சர் உள்ளடங்கலாக அநேக உயர் மட்ட அரச அதிகாரி கள் ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கைது செய் யப்பட்டுள்ளனர். முன்னாள் அமைச்சரும் தற்போது மத்திய அப்ருஸோ பிராந்திய ஆளுநராக பணி யாற்றுபவருமான ஓட்டாவியனோடெல் துர்கோவிடமும் ஏனைய 34 பேரிடம் ஊழல் குற்றச்சாட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்நாட்டு சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

பொது சுகாதார முறைமை தொடர்பான நிலையில் 10.2 மில்லியன்ஸ்ரேலிங் பவுண் பெறுமதியான பணத்தை மோசடி செய்ததில் சம்பந்தப்பட்டிருந்ததாக முன்னாள் அமைச்சர் மீதும் ஏனையவர்கள் மீதும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டிலிருந்து 2001ஆம் ஆண்டுவரை நிதி அமைச்சராக பணியாற்றிய டெல்துர்கோ. தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பாக எதுவித விமர்சனத்தையும் வெளியிடவில்லை கைது செய்யப்பட்ட வர்களில் அவரும் ஏனைய 9 பேரும் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(அ)

# ஒபாமாவின் ஆதரவு குறைகிறது

## 'த நியூஸ் வீக்' பத்திரிகை தெரிவிப்பு

அமெரிக்க ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான பராக் ஒபாமாவின் ஆதரவு திடீரென குறைந்துள்ளதாக த நியூஸ் வீக் பத்திரிகை இரண்டு கிழமைக்கு முன்னர் மேற்கொண்ட கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது. இந்த நிலையில் பராக் ஒபாமா 3 சதவீதத்தால் மாத்திரமே முன்னணியிலுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

எதிர்வரும்நவம்பர்மாதம்அமெரிக்கஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் ஜனநாயகக்கட்சிசார்பில் பராக் ஒபாமாவும் குடியரசுக் கட்சி சார்பில் ஜோன் மெக்கெய்னும் போட்டியிடுகின்றனர்.

இந்த இருவரில் அமெரிக்க ஜனாதிபதியாக வருவதற்கு யாருக்கு அதிக வாய்ப்புள்ளதென த நியூஸ் வீக் பத்திரிகை கடந்த மாதம் கருத்துக்கணிப்பொன்றை நடத்தியுள்ளது.

இந்தக் கருத்துக்கணிப்பின் போது பராக் ஒபாமாவுக்கு ஜோன்மெக்கெய்னை விட 15 சதவீத ஆதரவிருப்பதாக தெரியவந்துள்ளது. இந்த நிலையில் அந்தப் பத்திரிகை மீண்டுமொரு கருத்துக்கணிப்பை மேற்கொண்டுள்ள நிலையில் பராக் ஒபாமாவுக்கு 3 சதவீத அதிகம் இருப்பதாக தெரியவந்துள்ளது.



இதில் பராக் ஒபாமா 44 சதவீத ஆதரவையும் ஜோன் மெக்கெய்ன் 41சதவீத ஆதரவையும் பெற்றுள்ளனர்.

முக்கியபிரச்சினைகளில் பராக் ஒபாமா தனது நிலைப்பாட்டை அடிக்கடி மாற்றுவதாக ஹிலாரி கிளின்டனின் ஆதரவாளர்கள் கருதுவது பராக் ஒபாமாவின் இந்த சரிவுக்கான காரணமென சுட்டிக்காட்டப்படுகிறது.

(அ)

# சிவத்தமிழ் அன்னையின் சிவப்பேறும் பிரார்த்தனை

## வானுறையும் தெய்வமாகிய எங்கள் சிவத்தமிழ் அன்னை

மானிடப் பிறப்பின் மாண்பினை நன்கறிந்தவர் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியவர்கள். இறைபக்தியும், குருபக்தியும், தரும சிந்தனையும், நலிந்தோர்பால் பரிவும், ஆத்மீக நாட்டமும், செயல் திறனிற் துணிவும் கொண்டவர். நல்லாசிரியர், பண்டிதர், நன் மாணவர்களை உருவாக்கியவர்.

நல்லைநகர் நாவலர் பெருமானின் கோட்பாட்டில் பற்றுறுதிகொண்டு, அவர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்தவர். ஆறு சகாப்தங்கள் வரை யாரும் எண்ணிப்பார்க்கக் கூட முடியாதளவுக்கு, சீரிய நற்பணிகளை ஆற்றினார். இன்று உலகம் போற்றும் உத்தமியாக உயர்ந்து நிற்கின்றார். இவரது இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள் கூட்டமே இதற்குச் சான்று பகரும்.

மரத்தடியில் ஓர் சிறு கொட்டிலில் எழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டிருந்த துர்க்காதேவியின் ஆலய பரிபாலன சபையின் தலைமைப் பதவியை 1966ஆம் ஆண்டு அன்னை அவர்கள் ஏற்றதன் பின் இவரின் ஆற்றல் மிகு சேவையால் உலகெல்லாம் உணர்தற்குரிய தெய்வம் குடிகொள்ளும்திருத்தலமாக தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் விளங்கிற்று.

``ஆலயங்கள் வழிபாட்டிற்குரிய இடங்களாக மட்டும் அமையாது அவை அறச்சாலைகளாக விளங்கவேண்டும். அனாதைகளை ஆதரித்தல் ,சமூக நலன்களைப் பேணுதல், கல்வி, சுகாதாரப்பணிகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றையும் செய்யவேண்டும் என்பதே'' அன்னையின் சீரிய நோக்காகும்.

உசன் கந்தசுவாமி கோவிலின் வரலாற்றுச் சிறப்புக்களை நன்கறிந்த அன்னை அவர்கள் 30 ஆண்டுகளுக்கு முன் அக் காலத்தில் ஆலய அறங்காவலராக இருந்த க.வி.நடராசாவிடம் உங்கள் ஆலயத்தில் சிவாச்சாரியாராக இருப்பவர்களில் ஒருவராகிய சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக்குருக்களை எமது ஆலய பிரதம சிவாச்சாரியாராக கடமை செய்ய அனுமதி அளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அதன் பிரகாரமே சுந்தரேஸ்வரக்குருக்கள் இன்றுவரை தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியாராக கடமையாற்றி வருகின்றார்.

**க.பேரம்பலம்**
**உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஓய்வு)**

1995ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது சிவத்மிழ் செல்வி அம்மையும் தேவஸ்தான மகளிர் இல்லப் பிள்ளைகள் 60பேரையும், பணிசெய்யும் தொண்டர்களையும் உசன் கந்த சுவாமி கோவில் அறங்காவலர் நடராசா அவர்கள் வரவேற்று தமது இல்லத்தில் தங்க வைத்தார்.



முருகன் கோவில் வீதியில் இருந்த சுந்தரேஸ்வரக்குருக்களின் இல்லத்தில்இருந்து அம்மையார் தேவஸ்தானப் பணிகளை செய்தார். ஆறு மாத காலங்களில் நாள்தோறும் அன்னையாரும் மகளிர் இல்லப்பிள்ளைகளும் ஆலய பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டு கூட்டுப்பிரார்த்தனை, சமயச்சொற்பொழிவுகளைச் செய்து வந்தனர். அன்னை அவர்களின் அறப்பணியால் ஈழமண் புனிதமடைந்தது.

சிவபூமி என்றபெருமை பாதுகாக்கப்பட்டது. புண்ணிய கருமம் ஆற்றிய அன்னையின் புனித ஆத்மா எல்லாம் வல்ல இறைபரம்பொருளின் பாதார விந்தங்களில் வீற்றிருந்து எம்மை ஆசீர் வதிக்கட்டும்.

## எம் சுவாசத்தின் காற்றே

கதிரவனாய் நின்றாய் காலையிலே
மதியாகி நின்றாய் மாலையிலே
நதியாகி நின்றாய் வயலினிலே
நிதியாகி நின்றாய் வாழ்வினிலே

மரமாகி நின்று நிழல் தந்தாய்
உரமாகி நின்று பயிர் தந்தாய்
குரலாகி நின்று ஒலி தந்தாய்
விளக்காக நின்று ஒளி தந்தாய்

மேன்மைகொள் சைவநீதி
மேம்படத் துணையாய் நின்றாய்
அறவழியில் தடம் பதித்தாய்
துறவரசியாய் திகழ்ந்தாய்

அபயக்கரம் கொடுத்து
அகதிக்கு வாழ்வு தந்தாய்
திக்கற்ற பாலகற்கு
அமுதூட்டி அரவணைத்தாய்

தேன்சொட்டும் தமிழினிலே
திகட்டாத உரை தந்தாய்
பொன்னின் பெயரெடுத்தாய்
பெண்களுக்கு பெருமை தந்தாய்

பயணித்த களை நீக்க
பசி தீர்த்து அனுப்பி வைத்தாய்
தெல்லி ஊர் நாயகியே
தேவியின் திருவிளக்கே

பெண்ணினத்தின் பொன்முடியே-எம்
இனத்தின் கண்மணியே - எம்
மண்ணை விட்டு மறையவில்லை-எம்
மண்ணுடன் மண்ணானாய்-எம்
சுவாசத்தின் காற்றானாய்

முக்கனியே முத்தமிழ் வித்தகியே
மீண்டும் பிறப்பெடுத்து
எமை வந்து காத்திடம்மா

*நடராசா சந்திரலிங்கம்*
*அச்சுவேலி வடக்கு.*

## பண்டிதமணி தந்த சான்றிதழுடன்

## சிவத்தமிழ் அன்னையை சந்தித்த திருநாள்...

கடந்த 15/06/08 ஞாயிற்றுக்கிழமை சிவத்தமிழ் அன்னை தெய்வமாகி விட்டார். சிவத்தமிழ்ச்செல்வி அம்மா ஒரு உலகப் பெரும் சொத்து. அவர்களின் பணிகளை உணர்ந்த சர்வதேச அன்பர்களும் அவரின் மறைவு கண்டு கண்ணீர் வடிக்கின்றனர்.

தெல்லிப்பழை துர்க்கை அம்பாளையே தமது வழிபடு தெய்வமாக்கி அரும்பெரும் பணிகளினால் ஒளிமயமான காலத்தை உருவாக்கிய பெருமை சிவத்தமிழ்ச் செல்வி அம்மா அவர்களையே சாரும். அவர்கள் ஆற்றிய தொண்டுகள் சைவத்துக்கும் தமிழுக்கும் மட்டுமல்லாது சமுதாய முன்னேற்றத்துக்கும் முதன்மை தருவன.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் துர்க்கை அம்மனிடத்தில் வழிபாடுசெய்யவும், சிவத்தமிழ்ச்செல்வி அம்மா அவர்களின் நிதி நிர்வாகப் பரிபாலனத்தில் பணிசெய்யவும் பெரும் பேறு பெற்றேன் எனக்கு இங்கு பணி செய்ய அறிமுகஞ் செய்து நேர்முகப் பரீட்சைக்கு பண்டிதமணி அவர்கள் வழங்கிய சான்றிதழ் வருமாறு.

**"ஸ்ரீ கா.சிவபாலன் அவர்களை நான் நன்கு அறிவேன். மிகவும் உண்மையானவர். கோயில் தருமங்களில் இயல்பாகவே பெரிதும் ஈடுபாடுடையவர். மட்டுவில் முத்துமாரி அம்மன் கோயில் வளர்ச்சிக்கு காரணமாக இருந்தவர். மட்டுவில் சிவன் கோவிலை நல்ல நிலையில் வைத்தற்கு முயன்று கொண்டு இருப்பவர். தரும விஷயங்களில் இவரைப் போல ஆள் கிடைப்பது அரிது. என் நம்பிக்கைக்கு உரியவர் இவர்.**

**-சி. கணபதிப்பிள்ளை**

இதுவே சிவத்தமிழ்ச்செல்வி அம்மா அவர்களைத் தரிசிக்க கிடைத்த தவப்பேறாகும். பண்டிதமணி அவர்களின் நூல்களை எவ்வாறு படித்தோமோ அவ்வாறே சிவத்தமிழ்ச்செல்வி அம்மாவின் எழுத்துக்களை எழுத் தெண்ணிப் படித்திருக்கின்றேன். சிவத்தமிழ்ச்செல்வி அம்மாவின் சைவப்பிரசாரங்களைக் கேட்டு இன்புற்று இருக்கிறேன்.

தினகரன் வழங்கிய பண்டிதமணி என்ற பட்டமே மேலோங்கி நிற்கிறது. சிவத்தமிழ்ச்செல்வி அம்மாவுக்கு ஈழத்துச் சிதம்பரம் மணிவாசகர் சபையின் வைத்தீஸ்வரக்குருக்கள் ஐயா வழங்கிய ''சிவத்தமிழ்ச்செல்வி'' என்ற பட்டமே சிறப்புச் செய்கின்றது.

ஆதரவற்ற ஏழைப் பெண் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு இல்லம் அமைத்தவர் அம்மா அவர்களே. கோயில் தர்மங்களைப் பேணி, சைவாலய பரிபாலனத்தை கற்றுத்தந்தவர் அம்மா. என் தந்தையிலும் சிறந்த தந்தையாக என்னைப் பல துறைகளிலும் வளர்த்து எடுத்தவர் சிவத்தமிழ்ச்செல்வி அம்மா அவர்களே.

**கா.சிவபாலன் .**

## ஈழத்தின் காவலர் சிவத்தமிழ்ச்செல்வி

நிறைவுக்கோர் நிலையமாக எழுந்த சிவத்தமிழ்ச்செல்வி
நெடுமறைப் பொருளேயாக எழுந்த சிவத்தமிழ்ச்செல்வி
துறைதோறும் சோதியாக எழுந்த சிவத்தமிழ்ச்செல்வி
தொன்மை இறைதர்மம் காக்க எழுந்த சிவத்தமிழ்ச்செல்வி
இறையருள் ஆணையேற்ற எங்கள் சிவத்தமிழ்ச்செல்வி
ஈழத்தின் சமய சமூகப் பணிகளாற்றிய சிவத்தமிழ்ச்செல்வி
மறையுள்ள வரையும் அன்னையின் நாமம் வாழும்
மானிலத்தில் அன்னையின் நெறியில் வாழ்வோம் வாரீர்

*மதுரகவி காரை எம்.பி.அருளானந்தம்*

# றோயல் கல்லூரி, கொழும்பு -07
# Royal College, Colombo - 07

க.பொ.த. (உயர்தர) முன்னோடிப் பரீட்சை
Pilot Examination

ஆனி 2008
June 2008

தரம் 13
Grade 13

வணிகக் கல்வி– I (பகுதி I)
Business Studies-I (Part I)

1 மணித்தியாலம்
1 Hour

01) முதனிலை உற்பத்தியின் கூறுகள் உள்ளடக்கியுள்ள தொகுதியை தெரிவு செய்க.
1) விவசாயம், காட்டுத்தொழில், மீன்பிடி, கைத்தொழில்
2) விவசாயம், காட்டுத்தொழில், மீன்பிடி, சுரங்கத்தொழில்
3) விவசாயம், காட்டுத்தொழில், மீன்பிடி, நிர்மாணம்
4) விவசாயம், காட்டுத்தொழில், சுரங்கத்தொழில், நிர்மாணம்
5) விவசாயம், காட்டுத்தொழில், சுரங்கத்தொழில், உற்பத்தி.

02) "ஆபிரகாம் மாஸ்லோ" என்பவரது தேவைகளின் சரியான படி முறையினைக் குறிக்கும் தொகுதி எது?
1) உடலியல் / பாதுகாப்பு / சமூக / கௌரவ /சுயகௌரவ தேவை
2) உடலியல் / சமூக / பாதுகாப்பு / கௌரவ / சுயகௌரவ தேவை
3) உடலியல் / பாதுகாப்பு / சமூக / சுயகௌரவ / கௌரவ தேவை
4) உடலியல் / பாதுகாப்பு / கௌரவ/ சமூக / சுயகௌரவ தேவை
5) பாதுகாப்பு / சமூக / உடலியல் / கௌரவ / சுயகௌரவ தேவை

03) தேவைகள்,விருப்பங்கள் தொடர்புள்ள கூற்றுக்களில் சில கீழே தரப்பட்டுள்ளது.
A) தேவைகள் கட்டாயம் பூர்த்தி செய்யப்பட வேண்டியவை.
B) தேவைகள் சந்தைப்படுத்துவோரால் உருவாக்கப்படும்.
C) விருப்பங்கள் வேறுபட்டவை, வரையறுக்கப்படாதவை.
D) தேவைகள் பால், வருமானத்திற்கமைவாக வேறுபடும்.
E) தேவைகள் முதல் நிலைக்குரியவை, விருப்பங்கள் இரண்டாம் நிலைக்குரியவை.
மேலே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியான தொகுதி.
1) ACD 2) ABC 3) ACE 4) CDE 5) CBD

04) ஒரு பொருள் தொடர்பான நுகர்வோர் மத்தியிலான நல்லெண்ணம், சிறந்த பொதியிடல், சமூகப் பொறுப்பு, சிறந்த சேவை என்பவற்றுடன் தொடர்புடைய பொருள் வகை எது?
1) வசதிப் பண்டம் 2) கடைப் பண்டம் 3) சாதாரண பண்டம்
4) ஆடம்பரப் பண்டம் 5) தனிச்சிறப்புப் பண்டம்

05) வணிகமொன்றில் குறிக்கோள் தொடர்பான கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளது,
A) குறிக்கோள் திட்டவட்டமானது அல்ல.
B) வணிக அபிவிருத்தியினை அளவிடக் குறிக்கோள் அவசியம்.
C) தீர்மானம் எடுப்பதற்கு குறிக்கோள் உதவும்.
D) குறிக்கோள் நீண்டகாலத் தன்மையுடையது.
E) ஒவ்வொருவரும் தமது பணிகளை மேற்கொள்ள குறிக்கோள் வழிகாட்டுகிறது.
மேலே தரப்பட்டுள்ளவற்றுள் சரியான கூற்றுகளின் தொகுதி எது?
1) BCE 2) ABD 3) BDE 4) CDE 5) ADE

06) தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கும், நலன்புரி வசதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் பொறுப்பாக இருப்பது,
1) அரசாங்கம் 2) தொழிற்சங்கம் 3) தொழிலாளர்கள்
4) சமூகம் 5) முகாமையாளர்கள்

07) வணிகமொன்றின் ஊழியர்கள் சிறந்த திறன்களையும், நேரான மனப்பாங்கினையும் கொண்டிருப்பது எதுவாகக் கருதமுடியும்.
1) அச்சுறுத்தல் 2) சந்தர்ப்பம் 3) பலங்கள் 4) பலவீனங்கள் 5) சவால்கள்

08) 2008 ஆம் ஆண்டு அரச வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள தொலைக்காட்சி, மின்சாரம், தொலைபேசிப் பாவனை தொடர்பான சூழல் வரியானது எவ்வளவாக அமையும்,
1) 20/- 2) 30/- 3) 50/- 4) 100/- 5) 60/-

09) 2007 ஆம் ஆண்டிற்கான மூலதன வருமானம் இலங்கையில் 1617 அமெரிக்க டொலராகும். இவ் வருமானம் எச் சூழலாக கருதமுடியும்.
1) பூகோளச் சூழல் 2) சமூக கலாசாரச் சூழல் 3) அரசியல் சட்ட சூழல்
4) தொழில்நுட்பச் சூழல் 5) பொருளாதாரச் சூழல்

10) நுகர்வோர், நுகர்வோர் கல்விசார் பரந்த அறிவினைக் கொண்டிருக்க வேண்டியது கீழ்வருவனவற்றுள் எது தொடர்பானது,
1) சட்டத்தேப்பாடுகள் 2) நுகர்வோர் பொறுப்புக்கள் 3) நுகர்வோர் உரிமைகள்
4) வணிக ஒழுக்கம் 5) சமூகப் பொறுப்புக்கள்

11) பங்குடமையொன்று கட்டாயமாகக் கலைக்க வேண்டிய சந்தர்ப்பம் பின்வருவனவற்றுள் எதுவாகும்,
1) இயங்காத நிலைமை 2) பங்காளரின் மரணம்
3) சட்டமுரணான பணியில் ஈடுபட்டிருத்தல் 4) பங்காளர் கடமை தவறிச் செயற்படுதல்
5) பங்காளரின் தகாத நடத்தை

12) பங்குடமையில் மூலதனமிட்டு, இலாப நட்டத்திலும் பங்கெடுத்து, முகாமை நடவடிக்கைகளில் பங்குபற்றாத பங்காளர் வகை எது?
1) பெயரளவில் பங்காளர் 2) இயங்கும் பங்காளர்
3) அமைதிப் பங்காளர் 4) இயங்காத பங்களிப்பு
5) போலிப்பங்காளர்

13) பொது வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றினை ஆரம்பிப்பதற்கு அவசியமான ஆவணம் எது?
1) அமைப்பு புற விதிப்பத்திரம் 2) முன் விபரணம் 3) சட்டமுறைப் பிரகடனம்
4) விண்ணப்பம் 5) அமைப்பு அகவிதிப் பத்திரம்

14) கம்பனிகள் தொடர்பான புதிய சட்டம் எதுவாகும்,
1) 1918 வியாபாரப் பெயர்க்கட்டளைச் சட்டம்
2) 1840 மோசடி தவிர்ப்புச் சட்டம்
3) 1987 பொதுத்துறை நிறுவனங்களை பொது கம்பனியாக்கும் சட்டம்
4) 1987 (17) கம்பனிச் சட்டம்
5) 2007 (07) கம்பனிச் சட்டம்

15) காசோலைப்பிரதி விம்ப தீர்ப்பனவு முறையின் கீழ் வங்கிக்கும், லங்கா கிளியர் நிறுவனத்திற்குமிடையில் பயன்படுத்தப்படும் ஆவணம் எது?
1) காசோலை 2) பிரதிவிம்ப அறிவிப்பு 3) காசோலை நிழற்பிரதி
4) வங்கி தயாரிக்கும் ஆவணம் 5) செயலிழந்த காசோலை

16) "Lanka Secure " முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது யாராலாகும்,
1) மக்கள் வங்கி 2) இலங்கை வங்கி 3) லங்கா கிளியர் P லிமிட்டெட்
4) மத்திய வங்கியின் படுகடன் திணைக்களம் 5) பங்குச் சந்தை

17) "கைமாற்றத்தகாதது" எனும் குறுக்குக் கோடிடல் தொடர்பான சரியான கூற்று எது?
1) காசோலையினை கைமாற்ற முடியாது
2) காசோலை குறித்த நபரின் கணக்கில் மட்டும் வைப்புச் செய்யமுடியும்
3) பெறுபவரால் வழங்குபவரின் உரிமையினை விடக் கூடிய உரிமை பெறமுடியாது
4) கருமபீடத்தில் சமர்ப்பித்தும் பணம் பெறமுடியும்
5) காசோலையினை வரைந்தவரிடம் கொடுத்து புதிய காசோலையினை பெறமுடியும்

18) தொழில் நிறுவனமொன்றின் தொழிலாளர்களுக்கு ஏற்படக் கூடிய விபத்துக்களுக்காக எடுக்கப்படக் கூடிய காப்புறுதி வகை எது?
1) தனிநபர் விபத்துக் காப்புறுதி
2) தொழிலாளர் விபத்துப் பொறுப்புக் காப்புறுதி
3) பொதுகளப் பொறுப்புக் காப்புறுதி
4) சொத்து உடைமையாளர் பொறுப்புக் காப்புறுதி
5) ஆயுட் காப்புறுதி

19) இறக்குமதிப் பதிவு யாரால் தயாரிக்கப்படும்
1) இறக்குமதியாளர் 2) கப்பல் கம்பனி 3) காப்புறுதிக் கம்பனி
4) ஏற்றுமதியாளர் 5) வங்கியாளர்

20) மெய்ப்பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று விகிதக் கணிப்பீட்டிலுள்ள பிரதான வர்த்தக பங்களிப்பு நாட்டினுடைய நாணயம் அல்லாதது எது?
1) அமெரிக்க டொலர் 2) ஸ்ரேலிங் பவுண் 3) கனடா டொலர்
4) இந்திய ரூபா 5) ஜப்பான் ஜென்

21) தன்னியக்க காசாளர் இயந்திரங்கள் சிறப்புச் சந்தையில் அமைக்கப்பட்டு சேவை வழங்கப்படுவது ........................................ என அழைக்கப்படும்

22) "Lanka Secure" முறைமூலம் ........................ க்கும், ........................ க்கும் இடையில் பிணைப்பு ஏற்படுத்தப்பட்டு இலத்திரனியல் முறையிலான பரிமாற்றம் இடம்பெறுகின்றது.

23) திறைசேரி உண்டியல் முதிர்வடையும் போது அதன் வட்டி கணிக்கப்பட்டு வாடிக்கையாளருக்கு இலத்திரனியல் முறையில் வழங்கப்படும் வணிக முறையை ........................................ என அழைக்கப்படும்.

24) மோட்டார் வாகனத்திற்கு ஏற்படும் இழப்பினை ஈடுசெய்வதற்காக ........................................ காப்புறுதிப்பத்திரம் பெறப்பட வேண்டும்.

25) மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் வெளியிடப்படும் நீண்டகால பிணைப்பத்திரம் ........................................ எனப்படும்.

26) விமானம், பொருட்கள், விமானப் பொதிகள் என்பவற்றிற்கு ஏற்படும் இழப்புகளை ஈடு செய்யும் காப்புறுதிப் பத்திரம் ........................................ எனப்படும்.

27) திட்டமிடப்பட்ட கால அட்டவணையின்படி திட்டமிட்ட பாதைகளில் பிரயாணத்திலீடுபடும் கப்பல்கள் ........................................ என அழைக்கப்படும்.

28) செய்தியினை வழங்குபவருக்கும், பெறுபவருக்குமிடையிலான செய்முறை ........................................ என அழைக்கப்படும்.

29) மொத்த வியாபாரியிடமிருந்து பொருட்களைப் பெற்று இறுதிப் பாவனை நுகர்வோருக்கு வழங்கப்படுபவர் ........................................ ஆகும்.

30) ஏனைய நாடுகளை விட குறைந்த செலவில் பொருட்களை ஒரு நாடு உற்பத்தி செய்யும் கோட்பாடு ........................................ எனப்படும்.

31) ஒரு கம்பனி மற்றொரு கம்பனிக்கு குறுந்தகவல்களைக் கொடுப்பதற்கு பயன்படுத்தக் கூடிய சாதனம் எது ........................................

32) சிறப்புச் சந்தையை விட பகுதிக் கடையின் வேறுபட்ட பண்புகள் 02 தருக?
........................................
........................................

33) சர்வதேச நாணய நிதியத்தின் பணிகள் 02 தருக?
........................................
........................................

34) நீர் ஒரு வணிகத்தில் இணைந்து கொள்ளக் கூடிய முறைகள் தருக?
........................................
........................................

35) வணிகக் குறிக்கோள் ஒன்று கொண்டிருக்கக் கூடிய பிரதான பண்புகள் 05 தருக?
........................................
........................................
........................................
........................................
........................................


36) வணிகத் திட்டத்தில் காணப்பட வேண்டிய பிரதான விடயங்கள் 04 தருக?
........................................
........................................
........................................
........................................

37) நுகர்வோருக்குள்ள உரிமைகள் 04 தருக?
........................................
........................................
........................................
........................................

38) பணவீக்கத்தினை அளவிடுவதற்கு அரசாங்கம் பயன்படுத்தக் கூடிய முறைகள் 02 தருக?
........................................
........................................
........................................
........................................

39) கம்பனியொன்றின் கட்டாய ஒழுக்கம் இடம்பெறக்கூடிய 02 சந்தர்ப்பங்கள் தருக?
........................................
........................................

40) காப்புறுதி ஒப்பந்தமொன்றுடன் தொடர்புடைய 03 கட்சியினைக் குறிப்பிடுக.
........................................
........................................
........................................





யாழ்ப்பாண பொலிஸ் அதிகாரிகளின் ஏற்பாட்டில் திப்படுவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கள மானிட ஒத்துழைப்பிற்கான அமைப்பின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டி, உணவுப் பொருட்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் வடபிராந்திய பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர, யாழ்.மேலதிக அரச அதிபர் சிவசுவாமி,பொலிஸ் அதிகாரிகள் மற்றும் ஆசியுரை வழங்கிய சமயப் பெரியவர்களையும், மாணவர்களுக்கு வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:கவி)

## ஊக்கமருந்து பயன்படுத்தியமை தொடர்பான வழக்கு விசாரணை முடியும்வரை பாக்.அணியிலிருந்து ஆசிப் நீக்கம்



### பி.சி.பி அறிவிப்பு

(லாகூர்)

ஊக்கமருந்து சோதனையில் சிக்கிய முகமெட் ஆசிப் கிரிக்கெட்டில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார்.

இந்தியாவில் நடந்த இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) இருபது -20 கிரிக்கெட் போட்டியில் ஐ.சி.சி. விதிப்படி ஊக்கமருந்து சோதனை நடத்தப்பட்டது.

சோதனை முடிவில் பாகிஸ்தான் வேகப் பந்து வீச்சாளர் முகமெட் ஆசிப் ஊக்க மருந்து பயன்படுத்தியமை தெரியவந்தது.

இது பற்றி ஐ.பி.எல் அமைப்பு கடந்த திங்கட்கிழமை பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு இ-மெயில் மூலம் தெரியப்படுத்திவிட்டது.

25 வயதான முகமெட் ஆசிப், நாண்ட்ரோலன் என்ற ஊக்கமருந்தை சாப்பிட்டு இருக்கலாம் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வட்டார தகவல்கள் கூறியுள்ளன. இந்த மருந்தை ஆசிப் தனது முழங்கை காயத்துக்கு எடுத்து இருக்கலாம்.

நாண்ட்ரோலன் மருந்து தசையை வளர செய்யும். சிவப்பு அணுக்களை அதிகரிக்கச் செய்யும். எலும்பையும் பலமடையச் செய்யும் இந்த வகை மருந்தை சாப்பிட்டால் இரத்தத்தில் அதன் தாக்கம் மூன்று முதல் ஆறு மாதங்கள் வரை இருக்குமாம்.

இதனால்தான் அவர் ஊக்கமருந்து சோதனையில் சிக்கி விட்டார். ஆசிப் ஏற்கனவே 2006ஆம் ஆண்டும் ஊக்கமருந்து சர்ச்சையில் சிக்கியிருக்கிறார். தவிர சமீபத்தில் டுபாயில் போதைப் பொருள் வைத்திருந்ததாக 19 நாள் காவலில் வைக்கப்பட்டு, விடுவிக்கப்பட்டார்.

அந்த விசாரணையே இன்னும் முடியாத நிலையில் ஆசிப்பால் மீண்டும் பிரச்சினை உருவாகி இருப்பதால் அவர் மீது இனியும் கருணை காட்ட பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தயாராகவில்லை.

அவரைக் கைகழுவி விடும் முடிபுக்கு வந்துவிட்டது. இந்நிலையில் முகமெட் ஆசிப்பை கிரிக்கெட்டில் இருந்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நீக்கம் செய்து அறிவித்துள்ளது.

ஐ.பி.எல் அமைப்பின் போதைப்பொருள் தீர்ப்பாயம் தனது விசாரணையை முடிக்கும் வரை கிரிக்கெட் மற்றும் அது சம்மந்தமான அனைத்து நடவடிக்கையிலிருந்தும் ஆசிப் உடனடியாக விலக்கி வைக்கப்படுவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைமைச் செயலதிகாரி ஷப்கத் நக்மி நிருபர்களிடம் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

மேலும் அவர் ஊக்க மருந்துக்கு எதிரான விதிகளை நடைமுறைப்படுத்துவதில் ஐ.சி.சி மற்றும் அதன் உறுப்பினர்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முழு ஒத்துழைப்பு அளிக்கும்.

இந்திய கிரிக்கெட் சபை மற்றும்.ஐ.பி.எல் போதைப்பொருள் தீர்ப்பாயம் எடுக்கும் நடவடிக்கைகளில் இணைந்து செயற்படுவோம் என்றார். (5)

## இந்திய-இலங்கை கிரிக்கெட் சபை லீக் பயிற்சி ஆட்டம் நாளை ஆரம்பம்

(கொழும்பு)

இந்தியக் கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது.

டெஸ்ட் தொடர் எதிர்வரும் 23ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகின்றது. இதில் விளையாடுவதற்காக கும்ளே தலைமையிலான இந்திய டெஸ்ட் அணி நேற்று முன்தினம் சென்னையிலிருந்து இலங்கை வந்தடைந்தது.

டெஸ்ட் தொடருக்கு முன்பு இந்திய அணி இலங்கை கிரிக்கெட் சபை லெவினுடன் மோதும் மூன்று நாள் பயிற்சி ஆட்டம் நாளை ஆரம்பமாகிறது.

டெஸ்ட் தொடர் குறித்து கும்ளே கொழும்பில் நிருபர்களிடம் கூறியதாவது,

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடர் சவால் நிறைந்தது. ஆனால் இதை எதிர்கொள்ள நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

டெஸ்ட்டில் வெற்றி பெற கடுமையாகப் போராடுவோம். அஜந்த மெண்டிஸ் சிறந்த பந்துவீச்சாளர் தான். ஆனால் எங்களது அனுபவம் வாய்ந்த நடுத்தரவரிசை துடுப்பாட்ட வீரர்கள் அவரது பந்துவீச்சை எதிர்கொள்வதில் சிரமம் இருக்காது.

தோனி ஆடாததால் தினேஸ் கார்த்திக் அல்லது பார்த்திப் பட்டேலுக்கு வாய்ப்பு கொடுக்கப்படும். (5)

## பாகிஸ்தான் உத்தேச அணியில் சொயிப் அக்தருக்கு வாய்ப்பு

### முகமெட் யூசுப் விலகல்



(கராச்சி)

சம்பியன்ஸ் தொடருக்கான பாகிஸ்தான் உத்தேச அணியில் அக்தர் இடம் பெற்றார். ஆசிப் நீக்கப்பட்டுள்ளார். மூத்த வீரர் முக மெட் யூசுப் விலகியுள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பரில் பாகிஸ்தானில் சம்பியன்ஸ் (மினி உலகக்கோப்பை) தொடர் நடைபெறவுள்ளது.

இதற்கான பாகிஸ்தானின் முப்பது வீரர்கள் கொண்ட உத்தேச அணி அறிவிக்கப் பட்டுள்ளது.இதில் அக்தர் இடம்பெற்றுள்ளார். இவரது 18 மாத தடையை நீதிமன்றம் நிறுத்தி வைத்தது.

ஆனால் அபராதம் குறித்து நீதிமன்றம் எதுவும் சொல்லவில்லை. இதனால்அக்தரை எப்படியும் அபராதப் பணத்தை கட்ட வைக்க வேண்டும் என பி.சி.பி தீவிர முயற்சி செய்து வந்தது.

ஆனால் அக்தர் நீதிமன்றின் தீர்ப்புக்கு பின்னர்தான் எதுவும் செய்ய முடியும் என உறுதியாக இருந்தார். இந்நிலையில் ஆசிப் விவகாரம் வெடித்தது.

முதலில் உத்தேச அணியில் ஆசிப் இடம் பெற்றிருந்தார். இப்போது ஐ.பி.எல் கிரிக்கெட்டில் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து பயன் படுத்தியது நிரூபணமாகியுள்ளதால் அவரை நீக்க வேண்டியதாயிற்று.

வேறு வழியின்றி அக்தருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. ஆசியக் கோப்பையில் இடம் பெறாத கம்ரான் அக்மலும் உத்தேச அணியில் இடம்பெற்றுள்ளார்.

அணியிலிருந்து மூத்த வீரர் யூசுப் விலகி யுள்ளார். ரம்ழான் நோன்பு நாட்களில் கிரிக்கெட் விளையாடுவதை தவிர்க்கும் பொருட்டு தொடரில் இருந்து விலகியுள்ளார். (ச-5)

## கால்பந்து வீரர் றொனால்டினோ ரூபாய் 280 கோடிக்கு ஒப்பந்தம்

(ரோம்)

உலகின் தலைசிறந்த கால்பந்து வீரர்களில் ஒருவர் றொனால்டினோ பிறேசில் அணியின் முதுகெலும்பாக திகழ்ந்து வருகிறார்.

2002,2006ஆம் ஆண்டில் உலகக் கோப்பையில் இவரது ஆட்டம் அபாரமாக இருந்தது.

பிறேசில் நாட்டைச் சேர்ந்த இவர் ஸ்பெயின் நாட்டில் உள்ள பார்சிலோனா கழகத்துக்காக ஆடிவந்தார்.

றொனால்டினோவின் ஆட்டத்தைப் பார்த்து இத்தாலியிலுள்ள ஏசி.மிலன் கிளப் அவரை தன் பக்கம் இழுக்க முயற்சி மேற் கொண்டது.

இது தொடர்பாக பார்சிலோனா கழகத்துடன் ஏசி.மிலன் பேச்சுவார்த்தை நடத்தியது. இதில் உடன்பாடு ஏற்பட்டது.

இதன்படி 2011ஆம் ஆண்டு யூன் 30 ஆம் திகதிவரை ஏசி.மிலன் கழகத்தில் றொனால்டினோ விளையாடுவார்.

இதற்காக 280 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தமாகியுள்ளார். இதற்கான ஒப்பந்தத்தில் அவர் நேற்றுக் கையெழுத்திட்டார்.

2004, 2005ஆம் ஆண்டின் உலகின் சிறந்த கால்பந்து வீரர் விருதை றொனால்டினோ பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)



மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# இந்திய அரசைக் கண்டித்து ஜுலை 27-ல் உண்ணாநிலை

(சென்னை)

தமிழ்நாட்டு மீனவர்களைப் படுகொலை செய்யும் இலங்கைக் கடற்படையைத் தடுக்காத இந்திய மத்திய அரசை கண்டித்து எதிர் வரும் ஜுலை மாதம் 27 ஆம் திகதி தமிழ்நாட்டில் இராமேஸ்வரத்தில் உண்ணாநிலைப் போராட்டம் நடத்தவுள்ளதாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வை.கோ. அறிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று புதன்கிழமை அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாட்டு மீனவர்கள் நமது கடல் எல்லையிலேயே தாக்கப்படுவதும் படுகொலை செய்யப்படுவதும் அன்றாட நிகழ்வாகி விட்டது. இலங்கையில் தமிழினத்தைப் பூண்டோடு அழிக்கத் திட்டமிட்டு இனப்படுகொலை செய்து வரும் இலங்கை அரசுக்கு இந்திய அரசு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆயுதம் வழங்குதல் உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் செய்வதால்தான் சிங்களக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது துணிச்சலாகத் தாக்குதல் நடத்துகின்றனர்.

இலங்கைக் கடற்படையினருக்கு நீர்மூழ்கிப் பயிற்சியும் இந்தியா தருவது தமிழினத்துக்கு இழைக்கப்படும் துரோகமாகும். மத்திய அரசை எதிர்த்து மக்கள் சக்தியைத் திரட்ட வேண்டும் என்று முன்பே கூறியிருந்தேன்.

அதன் ஒரு கட்டமாகத் தமிழக மீனவர்களைப் படுகொலை செய்யும் இலங்கைக் கடற்படையைத் தடுக்கும் கடமையை செய்யாததுடன் சிங்கள அரசுக்கு துணை போகும் துரோகத்தை செய்யும் மத்திய அரசைக் கண்டித்து ஜுலை மாதம் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இராமேஸ்வரத்தில் எனது தலைமையில் உண்ணாநிலை அறப் போராட்டம் நடைபெறும்.

உண்ணாநிலை அறப் போராட்டத்ஜதப் பொருளாளர் மு.கண்ணப்பன் தொடங்கி வைப்பார் என்று அந்த அறிக்கையில் வை.கோ. தெரிவித்துள்ளார். (ச-5)

# சீருடைத் துணி, இரும்புக் கம்பிகளுடன் லொறிகள் பொலிஸாரினால் மீட்பு

(கொழும்பு)

ஓமந்தைச் சோதனைச் சாவடியில் நேற்று முன்தினம் பொலிஸாரின் சோதனை நடவடிக்கையின்போது இரண்டு லொறிகளின் கூரைப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சீருடைத் துணி, பற்றரிகள் மற்றும் இரும்புக் கம்பிகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட லொறிகள் இரண்டும் வவுனியாப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது தொடர்பாக மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர். முல்லைத்தீவு மாவட்டத்திற்கான அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிச் சென்ற அரசாங்க அதிபர் பேரிலான வாகனத் தொடரணியைச் சேர்ந்த இரண்டு லொறிகளிலேயே இந்த பொருள்கள் மறைத்து வைத்துக் கொண்டு செல்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும் வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-5)

# விடுதலைப்புலிகள் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

பாலமீன்மடுப் பகுதியில் மனிதப் புதைகுழி விடுதலைப்புலிகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, பாலமீன்மடு என்ற இந்த இடம் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்றது. இங்கு ஒரு பாழடைந்த கிணறு ஒன்றை தூர்வாரிக் கொண்டிருந்த மக்கள் அங்கிருந்து சுமார் 15 எலும்புக் கூடுகளைக் கண்டெடுத்திருக்கின்றார்கள்.

எனவே அந்தப் பகுதியின் கிராம சேவகர் மட்டக்களப்புப் பொலிஸாருக்குத் தகவல்தந்திருக்கின்றார். அவர்கள் உடனடியாக அந்தப் பகுதிக்குச் சென்றிருக்கின்றார்கள். சட்ட மருத்துவ அதிகாரி அந்த இடத்துக்கு அனுப்பப்பட்டிருக்கின்றார்.

அந்த மருத்துவ அதிகாரியின் கூற்றுப்படி இந்த மனித எலும்புக் கூடுகள் சுமார் 5 ஆண்டு காலப் பகுதிக்குரியவை எனத் தெரிய வருகின்றது. அப் பகுதிக் கிராம சேவகர், விடுதலைப்புலிகள் அக் காலப் பகுதியில் நடமாடியதாகக் கூறியிருக்கின்றார்.

எனவே விடுதலைப்புலிகள்தான் இந்த சிவிலியன்களைக் கொன்றிருக்க வேண்டும். இப் பகுதி 5 ஆண்டுகளுக்கு முன். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில்தான் இருந்தது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார மேலும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் முறைப்படி நடவடிக்கை எடுத்துள்ளதால் இது குறித்த தகவல்கள் விரைவில் தெரியவரும் என அவர் மேலும் கூறினார். (ச-5)

## மட்டு.மனிதப் புதைகுழி...

றுக்குத் தீர்வு எதுவும் கிட்டவில்லை. ஆனால் காணாமல் போனோர் படுகொலை செய்யப்பட்டனர் என்பதற்குச் சான்றுகள் சட்டபூர்வமாக இருந்தன.

ஆனால் இதுவரை அதற்கு எந்த விசாரணைகளோ தீர்வோ நீதித்துறையாலோ விசாரணைக் குழுக்களாலோ வழங்கப்படவில்லை. தமிழ் மக்கள் தொடர்பிலான படுகொலைகளுக்கு இதுவரை காலமும் எந்தவிதமான நீதியான விசாரணையும் நடக்கவில்லை. நீதியும் வழங்கப்படவில்லை.

மூதூரில் அக்ஷன் பாம் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்டனர். அது தொடர்பிலான விசாரணைகளில் ஜனாதிபதி விசாரணைக்குழு நேர்மையாக நடந்து கொள்ளவில்லை.

அந்த விசாரணைக்குழு அரசுக்கும் அவர்களின் படைகளுக்கும் சார்பாகவே செயற்பட்டுள்ளது. இதனால் விசாரணைகளைக் கண்காணித்த சர்வதேச நிபுணர் குழுவே இலங்கையை விட்டு வெளியேறிவிட்டது.

அக்ஷன் பாம் என்ற பிரான்ஸ் தொண்டு நிறுவனம் இந்தப் படுகொலைக்குச் சர்வதேச விசாரணை தேவை என்பதை வலியுறுத்துகின்றது. பிரான்ஸ் வெளியுறவு அமைச்சரும் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் நீதியற்ற தன்மையை இது அம்பலப்படுத்துகின்றது. 1990 ஆம் ஆண்டு முதல் மட்டக்களப்பில் நடத்தப்பட்ட பாரிய மனிதப் படுகொலைகள் எவற்றுக்கும் எந்தவொரு நீதி விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை.

நேற்று மட்டக்களப்பில் நீண்டகாலமாகப் படையினர் நிலை கொண்டுள்ள பாலமீன்மடுவில் எலும்புகள் எடுக்கப்பட்டுள்ளன. இது உலகை உலுக்கிய மனிதப் புதைகுழிகளுக்கு ஒப்பான - மிகப் பெரிய - மனிதப் புதைகுழியாகும்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் மனித உரிமைகள் எவ்வாறு மதிக்கப்படுகின்றன? தமிழ் மக்களுக்கு எத்தகைய பாதுகாப்பு இருக்கின்றது? ஆகியவற்றை இது தெளிவாகக் காட்டியுள்ளது. இந்தப் புதைகுழி விவகாரத்திற்கு நீதி கிடைக்கப் போவதில்லை. இதற்குச் சர்வதேச விசாரணைகள் தேவை என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## விடத்தல்...

திருக்கின்றது.

கடந்த சில தினங்களாக விடத்தல் தீவுப் பகுதியில் இரண்டு தரப்பினருக்குமிடையில் கடும் மோதல்கள் இடம்பெற்று வந்ததாகவும் இந்த மோதல்களில் 30ற்கும் அதிகமான விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டிருந்ததாகவும் பாதுகாப்புத் தரப்பில் கூறப்படுகின்றது.

எனினும் கடற்புலிகளின் விடத்தல் தீவு முகாம் கைப்பற்றப்பட்டிருப்பதாக வெளியான தகவல்கள் குறித்து விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து இதுவரை எந்தவிதமான அறிவிப்புக்களும் விடுக்கப்படவில்லை.

அதேவேளை விடத்தல் தீவு நகருக்கு வடக்கே எம்.ஐ.-24 ரக தாக்குதல் உலங்கு வானூர்த்திகள் விடுதலைப்புலிகளின் படகுகள் மீது தாக்குதல் நடத்தி இரண்டு படகுகளை அழித்துள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்திருக்கின்றனர்.

மன்னார், வெலிஓயாக் களமுனைகளில் நேற்று இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற வெவ்வேறு மோதல் சம்பவங்களில் குறைந்தது 20 விடுதலைப்புலிகளும் இராணுவச் சிப்பாய் ஒருவரும் கொல்லப்பட்டிருப்பதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் தகவல் மையம் கூறியிருக்கின்றது.

இதேவேளை வவுனியா பாலமோட்டைப் பகுதியில் நேற்று நண்பகல் வேளையில் விடுதலைப்புலிகளின் பிரதேசத்தினுள் முன்னேறுவதற்கு முயன்ற இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட எதிர்த் தாக்குதல்களில் 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் மேலும் 19 பேர் காயமடைந்ததாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்திருக்கின்றனர். (ச-5)

# மட்டக்களப்பில் மனிதப் புதைகுழி...

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாலமீன்மடு அகதி முகாமில் பாரிய மனிதப் புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்புக்கு வடக்காக 6 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பாலமீன்மடுப் பகுதியில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ள தற்காலிக வீடமைப்புத் திட்டத்தில் கிணறு தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மக்கள் இந்தப் புதைகுழியைக் கண்டுபிடித்துள்ளனர்.

நேற்று புதன்கிழமை முற்பகல் 9.30 மணிமுதல் தோண்டப்பட்ட இடத்திலிருந்து இதுவரை 16 உடலங்களுக்குரிய 32 மனித எலும்புகள் மீட்கப்பட்டுள்ளன.

இவற்றில் துப்பாக்கிச் சூடு பட்ட ஓட்டைகள் காணப்படுவதாகவும் மனித எலும்புகள் மீட்கப்பட்ட குழியில் ஆண்களினதும் பெண்களினதும் உக்கிப் போன ஆடைகளும் மீட்கப்பட்டுள்ளன என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரி-56, ரி-9 எம்.என். ரக துப்பாக்கிகளுக்குரிய வெற்றுத் தோட்டாக்களும் இப் பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன. புதைகுழி இருந்த இடத்தில் பொலிஸார் மற்றும் மருத்துவ அதிகாரிகளுடன் சென்று நீதிபதி பி.இராமகண்ணன் பார்வையிட்டுள்ளார்.

இராணுவத்தின் சோதனைச் சாவடியிலிருந்து சுமார் ஒன்றரைக் கிலோமீற்றர் தொலைவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்தப் புதைகுழி அமைந்துள்ள பாலமீன்மடு பல வருடங்களாக இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசமாகும்.

புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட வெற்றுரவைகளை வைத்துப் பார்க்கும் போது இந்தப் படுகொலைகள் சுமார் 4 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றிருக்கலாம் என்றும் இந்தப் புதைகுழியில் 16 பேர் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டிருக்கலாம் என்றும் தமது பூர்வாங்க அறிக்கையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு நகரிலிருந்து 6 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கடலோரக் கிராமமான பாலமீன்மடுவில் மூதூர் கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்துள்ள யுத்த அகதிகளுக்கான 2 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

குறித்த அகதிகள் கடந்த 2 வருடங்களாக அங்கு தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். தங்களின் முகாமில் கிணறு கட்டுவதற்காக குழி வெட்டியபோது மனித எலும்புகள் வரத் தொடங்கியதாக முகாம் தலைவரான கணபதிப்பிள்ளை பேரின்பராஜா கூறியுள்ளார்.

பொதுநிறுவனம் ஒன்று அப் பகுதியில் கிணறு வெட்டுமாறு கூறியது. இதனையடுத்து 4 பேர் இணைந்து கிணற்றை வெட்டியபோது எலும்புத் துண்டங்கள் வரத் தொடங்கின என்று இது தொடர்பாக அறிவிக்கப்பட்டது.

துணியினால் கைகள் கட்டப்பட்ட நிலையில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டன. இதேவேளை கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புகள் மற்றும் தடயங்களை வைத்துச் சரியான எண்ணிக்கை பற்றித் தற்போது தீர்மானிக்க முடியாது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை கிடைத்த பின்பே இது பற்றித் தீர்மானிக்க முடியும் என்று பொலிஸார் குறிப்பிடுகின்றனர். சில வருடங்களுக்கு முன்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவிய அமைதியற்ற சூழ்நிலையின் போது பலர் கடத்தப்பட்டுக் காணாமல் போயிருந்தார்கள்.

இப்படிக் கடத்தப்பட்டுக் காணாமல் போனதாகக் கூறியுள்ள சிலருடைய மனித எச்சங்களாக இவை இருக்கலாம் என்று பொதுமக்கள் மத்தியில் பரவலாக சந்தேகம் வெளியாகியுள்ளது. (ச-5)

## முன்னாள்...

சந்திப்பில் தற்போதைய நாட்டு நிலைமை குறித்து கேட்டறிந்தார்.

பிரித்தானியா ஜனநாயக நாடாகும். அங்கு வெட்டிக் கொல்லும் சம்பவங்கள், படுகொலைகள் இடம்பெறுவதில்லை. நாட்டின் தற்போதைய நிலை குறித்து நான் எடுத்துக் கூறினேன் என்றார்.

இதேவேளை வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகமவையும் பிரித்தா னிய அமைச்சர் சந்தித்துப் பேசியுள் ளார். (ச-5)

## நெடுங்...

தகர்க்கப்பட்டுள்ளது.

ஒட்டிசுட்டான் - நெடுங்கேணி வீதியிலுள்ள சமளங்குளம் மக்கள் குடியிருப்பில் அமைந்துள்ள இப் பாலம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளதால் புதுக்குடியிருப்பு நோக்கி வந்த பயணிகள் பஸ் சில மணிநேரம் கழித்தே பயணிக்க முடிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## பாலமோட்...

தமது நிலைகளுக்குப் பின் வாங்கினர். முறியடிப்புத்தாக்குதலில் பத்துப் படையினர் கொல்லப்பட்டனர்.

19 பேர் காயமடைந்தனர் எனப் புலிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## இராணுவ அதிகாரிகள்...

ஆரம்பித்துள்ளது.

இதுபோன்று கடந்த மாதங்களில் - இந்த வருடத்தின் முற்பகுதியில் - மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பு மூலம் சுமார் 10 ஆயிரம் பேர் இராணுவத்தில் இணைந்துள்ளார்கள் என்று இராணுவச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தின் தரைப்படையிலும் கடற்படையிலும் பெரும் எண்ணிக்கையானோர் விரும்பி இணைந்து கொள்கின்றார் என்றும் வான்படைக்கான ஆட்சேர்ப்பு சிரமமாகவுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு மூலம் திரட்டப்படுபவர்கள் இராணுவத்தின் சிறப்புப் படைப் பிரிவு, கொமாண்டோப் பிரிவு மற்றும் சிறப்பு படகுப் படை ஆகிய துறைகளில் பயிற்றுவிக்கப்படவுள்ளனர் என்று மேலும் தெரியவருகின்றது. (ச-5)

முக்கிய அறிவித்தல்

கிருஷ்ணா அடகு கடை

370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
பதிவு இல. J/DS/BR/472

மேலே குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2007 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆம் திகதி (30.06.2007) முன்னர் அடகு வைத்து மீட்கப்படாத அடகு நகைகள் யாவும் 2008 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு (15.08.2008) முன்னர் வட்டியைக் கட்டிப் புதுப்பிக்கவும்.

தவறின் அன்று விற்கப்படும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

370, K.K.S. Road,
Jaffna.

(C-1314)

- உரிமையாளர்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.07.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.